
வார இதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

இதழ் - 7 | 10.07.2023 - 16.07.2023 | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 16 | விலை : ரூ.70.00

# 13வது திருத்தம் தொடர்பில் ரணில் பல்டி அடித்தால்...?

## தமிழர் தரப்பில் பதிலடி!

## ஜனாதிபதி தேர்தலில் நெற்றியடி!!





பக்கம் 09

## ‘அஸ்வெசும’ திட்டம்! அப்பாவிகளின் அடி மடியில் கை வைத்தது அரசு!!



வட மாகணத்தினைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் போரின் கோர தாண்டவத்தால் குடும்பத்திற்கு தலைமை தாங்கும் பொறுப்பினைக் கொண்டிருக்கிறார். அவருக்கு இரண்டு பிள்ளைகள். அவர் துணையை இழந்து பதினைந்து வருடங்களாகிவிட்டது. அவரது பெற்றோர் மூப்படைந்து விட்டனர், அவர்களது பராமரிப்புக்காகவும், தனது பராமரிப்புக்காகவும், அவர்களுடனேயே தங்கி வாழ்கின்றார்.

பக்கம் 11

# தமிழகத்துக்கு தலைவர் ஆவாரா? தளபதி விஜய்?



தீவிரமாக தனது மக்கள் இயக்கப் பணிகளை முன்னெடுத்து வரும் விஜய். அதன் உட்கட்டமைப்பையும் கிட்டத்தட்ட ஒரு அரசியல் கட்சிக்கு நிகராக கட்டமைத்துள்ளார். மகளிர் அணி, மாணவரணியில் தொடங்கி கிளைக் கழகங்கள் வரை திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டு இருக்கின்றது. இந்த நிலையில் தீவிர மக்கள் நலப் பணிகளில் விஜய் மக்கள் இயக்கத்தினர் முழுமூச்சாக ஈடுபடத் தொடங்கி இருக்கிறார்கள்.

பக்கம் 05



பக்கம் 13

## சே குவேரா எனும் புரட்சிமுகம் !

### எக்காலமும் முகிழும் வீரத்தின் வித்து !!

### எவ்வா யுகந்களிலும் ஒளிரும் விழவெள்ளி !!!



பக்கம் 07

## புதைகுழிகளில் தோண்டி எடுக்கப்படும் போர்க்குற்ற உண்மைகள்!

### மறைக்கப்பட்ட உண்மைகளுக்கு மௌன சாட்சிகளாகும் எலும்புகள்!!

தேசியம் THESIYAM www.thesiyamnews.com

ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339

மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com

இணையம் : www.thesiyamnews.com



# தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமை ஒரு இனிமையான கனவு..?

தமிழ்த் தேசத்தின் இன்றைய நிலைமையை பற்றி, மக்கள் மத்தியில் பேச்சு எழும் சந்தர்ப்பங்களில் எல்லாம் - அது திருமண வைபவமாக இருந்தால் என்ன, மரண வீடாக இருந்தால் என்ன அல்லது வேறு எந்த தனிப்பட்ட - சமூக நிகழ்வாக இருந்தால் என்ன, அந்தப் பேச்சில் ஈடுபடும் அல்லது இணைந்து கொள்ளும் மக்கள், அதன் ஏதாவதொரு கட்டத்தில் 'எங்களிடம் தான் ஒற்றுமை இல்லையே' என்று சலித்துக் கொள்வது, சாதாரணமாக நம் எல்லோருக்கும் பரிச்சயமான விடயந்தான்!

தமிழ்த் தேசம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கும் கஷ்ட நஷ்டங்களுக்கு அடிப்படைக் காரணமே, அரசியல் ரீதியாக நாம் ஒன்றுபட்டு நிற்காமல், பல்வேறு கட்சிகளாக, வெவ்வேறு நிலைப்பாடுகளுடன், பிரிந்து நிற்பது தான் என்பதையே மேலே நாம் சுட்டிக் காட்டிய சம்பவங்கள், மீண்டும் மீண்டும் நமது மண்ணில் நிகழ்ந்து கொண்டிருப்பதன் மூலம், எடுத்துக் காட்டி நிற்கின்றன.

தமது சொந்த மண்ணில், சுதந்திரத்தோடு அமைதியாகவும், நிம்மதியாகவும் தாம் வாழ வேண்டும் என்பதே எமது மக்களின் அடிப்படை அபிலாஷை என்பதை, அறிந்திராத தமிழ் அரசியல்வாதிகளும் இல்லை, கட்சிகளும் இல்லை.

சுதந்திர இலங்கைத் தீவில், உரிமை வாழ்வுக்காக, எமது மக்கள் கடந்த 75 வருடங்களாக கொடுத்திருக்கும் விலை அளப்பரியது. அவர்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் விபரிக்கப்பட முடியாதவை. குறிப்பாக, 1983ல் ஆடி மாதத்தில் மூண்டெழுந்த சிங்களப் பேரினவாத வெறியாட்டங்களின் விளைவாக, தமிழ்த் தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டம், தமிழ்த் தேசத்தின் அனைத்து தரப்பினரின் ஆதரவோடு, பேரெழுச்சிப் பெற்ற அந்த நாட்களில் இருந்து, 2009 வைகாசி மாதத்தில் முள்ளிவாய்க்காலில் வெளிநாடுகளின் பலவற்றின் உதவியோடும், ஒத்தாசையோடும், பேரழிவுடன் அது முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட அந்த அதி பயங்கர நாட்கள் வரையில், கிட்டதட்ட 26 வருட காலம், ஒரு சில சிறிய இடைவேளைகளோடு, நீடித்த போர்க்காலத்தில் விடுதலை இயக்கங்கள் இடையே வெடித்துக் கிளம்பிய மோதல்கள் மற்றும் சகோதரப் படுகொலைகளின் மத்தியிலும் கூட, எமது மக்களிடம் பரந்துபட்ட அரசியல் ஒற்றுமை தொடர்ந்து நிலவியது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

சிங்கள பௌத்த அரச பயங்கரவாதத்திற்கு முகங்கொடுத்து நிற்க நிர்ப்பந்திக்கப்பட்ட எமது மக்களின் ஒற்றுமைக்கு, அதே பயங்கரவாதமே ஓர் முக்கிய காரணமாகவும் அமைந்திருந்தது என்பது வரலாற்றின் வேடிக்கை அல்ல, மாறாக, அந்தக் காலக் கட்டத்தின், எழுதப்படாத விதியே என்பதும் சோகங்கலந்த உண்மையே!

ஆனால், யுத்தம் முடிவடைந்த பின், கடந்த 14 ஆண்டு காலத்தில் தமிழ்த் தேசத்தின் அரசியல் ஒற்றுமை என்பது தொடர்ந்து பலவீனமடைந்தே வந்துள்ளது என்பது வேதனை நிறைந்த யதார்த்தமே ஆகம்.

தொடர்ந்து கொண்டிருக்கும் தமிழ்த் தேசத்தின் ஒற்றுமையீனத்தை, சிங்கள பௌத்த அதிகார சக்திகள் தம் சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னகர்த்திச் செல்வதற்கு ஏதுவாக பயன்படுத்தி வருவதையும், விடுதலைக்காக தொடர்ந்து ரத்தம் சிந்தப்பட்ட மண்ணில், இந்த அதிகார சக்திகளின் நட்பு வட்டத்திற்குள், நம்பிக்கைக்குரிய நல்ல மனிதர்களாக, பல தமிழ் அரசியல்வாதிகள் பகிரங்கமாகவும் ரகசியமாகவும், நேரடியாகவும் மறைமுகமாகவும், இயங்கிக் கொண்டிருக்கும் நிலைமையையும் ஆராய்ந்து பார்க்கையில், காலப் போக்கில் தமிழர் தேசம் அதன் விரோதிகளான பேரினவாத சக்திகளிடம் வீழ்ந்து விடுமோ என்ற அச்சமே மேலோங்குகின்றது.

கண்ணீர் விட்டே வளர்த்தோம்! சர்வேசா! கருகத் திருவுளமோ?' என்று தனது காலத்தில், இருபதாம் நூற்றாண்டின் இளைய வருடங்களில் புரட்சிக் கவிஞன் பாரதி, அப்போது சோர்வடைந்து, தளர்வடைந்து, வாடத் தொடங்கிய இந்திய சுதந்திரப் பயிரை, சோகத்துடன் வர்ணித்த அதே வரிகள், இன்றைய காலக்கட்டத்திற்கும் தமிழர் தேசத்தைப் பொறுத்தவரையில், பொருத்தமானதே என்பதை, அது எவ்வளவு கசப்பானதாக இருந்தாலும் கூட, சொல்லித் தான் ஆக வேண்டும்.

ஒற்மைப்படுவதற்கு ஏதுவாக, ஓர் வழி நின்று, நேர் வழி நடக்க மறுத்து வந்தவர்கள் அதே இடத்திலேயே தொடர்ந்தும் நின்று கொண்டிருக்கையில், ஒரு சில வருடங்களுக்கு முன்னர் வரையில், ஒரே கொடியின் கீழ் ஒன்றுபட்டு நின்றவர்களும் கூட, இன்று பிளவுபட்டு நிற்பதை நினைத்துப் பார்க்கையில், எமது அரசியல் தலைவர்களினதும், கட்சிகளினதும் ஒற்றுமையீனத்தைப் பற்றி எமது மக்கள், மரண வீடுகளிலும், திருமண நிகழ்வுகளிலும், குடும்பக் கொண்டாட்டங்களிலும் அலுப்புடன் பேசி சலித்துக் கொள்வதில் என்ன தான் தவறு இருக்க முடியும்?

தமிழ் மக்கள் மத்தியில், தமிழ் மாநிலத்தை தளமாகக் கொண்டு 14 கட்சிகள் என்றால், எமது பிரச்சினை பற்றித் தெரிந்த வெளிநாட்டவர்களுக்கு வியப்பாகத் தான் இருக்கும்.

இந்த 14 கட்சிகளில், மூன்று கட்சிகள் ஆட்சியில் இருக்கும் சிங்கள பேரினவாத சக்திகளுக்கு தொடர்ந்து ஆதரவாகவே இருந்து வந்திருக்கின்றன.

இந்த மூன்று கட்சிகளையும் நீக்கிவிட்டு, ஏனைய 11 கட்சிகளை, அவை தமிழ்த் தேசியம் சார்ந்து நிற்கின்றன என்ற அரசியல் அடிப்படையில் உற்று நோக்கினால் ஏன் அவை பிரிந்து நிற்கின்றன என்றே கேட்கத் தோன்றும்.

ஆயினும், இந்தக் கட்சிகள் பிரிந்து நிற்கின்றன- அவ்வப்போது பரஸ்பர விமர்சனங்களையும் முன்வைக்கின்றன.

இருந்தும், சற்று ஆறுதல் அளிக்கும் ஒரே ஒரு விடயமாக, இந்த 11 கட்சிகளில் 5 கட்சிகள், ஓரணியாக, தாமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பிரகடனத்தோடு, இணைந்து நிற்கின்றன.

**தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)**
**தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொற்)**
**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**
**- (ஈ.பி.ஆர்.எல்.எப்)**
**தமிழ்த் தேசியக் கட்சி**
**ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன தான் அவை!**

இந்த அணியுடன் இணைந்து நிற்காமல், தனித்து நிற்கும் கட்சிகளாக,

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி**
**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி**
**தமிழ் மக்கள் கூட்டணி**
**தமிழர் விடுதலைக் கூட்டணி**
**தமிழ்த் தேசிய பசுமை இயக்கம்**
**ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் என்பன உள்ளன!**

இவற்றில், அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம், பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியுடன் அரசியல் உறவைக் கொண்டிருக்கின்றது.

தமிழ் மாநிலத்தில், தமிழ்த் தேசிய அரசியல் தந்து நிற்கும் காட்சி இது தான்!

இந்த 14 கட்சிகளில், பொதுஜன பெரமுன அரசாங்கத்துடன் உறவு கொண்டு வந்திருக்கும் மூன்று கட்சிகள் தவிர, ஏனைய 11 கட்சிகளுக்கு இடையில் அரசியல் குறிக்கோளில் அடிப்படை ஒற்றுமை உண்டு.

இவை அனைத்தும், சமஷ்டி ஆட்சி என்று அழைக்கப்பட்டு வந்திருக்கும் இணைப்பாட்சி முறையை, தமிழ்த் தேசத்தின் அரசியல் அபிலாஷைகளுக்கான அடிப்படைக் கோரிக்கையாக முன்வைத்து நிற்கின்றன.

அதே நேரத்தில், தாம் கோரும் இணைப்பாட்சி தொடர்பில் இக்கட்சிகளுக்கு இடையில் நுணுக்கமான வேறுபாடு ஒன்றும் உண்டு.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், மிக சிரேஷ்ட அரசியல்வாதியுமான ஆனந்த சங்கரியின் தலைமையில் இயங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்தியாவில் அமைந்திருக்கும் இணைப்பாட்சி முறையையே, தனது குறிக்கோளாக வலியுறுத்தி வருகின்றது. இந்திய இணைப்பாட்சி, ஓர் அரை சமஷ்டி முறை என்றே பரவலாக ஒப்புக் கொள்ளப்படுகின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தமட்டில், அது கோரி நிற்கும் இணைப்பாட்சி, முழுமை நிறைந்தாக இருந்தாலும், அது கூட்டாட்சி அல்ல!

கூட்டாட்சி முறையையே, ஐந்து கட்சிகள் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமன்றி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் முன் வைத்துள்ளன.

இந்தக் கூட்டாட்சி முறைக்கு, ஐங்கரநேசனின் தலைமையிலான தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமும், அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகமும் இசைவான நிலைப்பாட்டையே கொண்டுள்ளன.

கூட்டாட்சி என்பது சமஷ்டி அல்லது இணைப்பாட்சி என்பதன் உச்சக் கட்டமைப்பு!

உதாரணத்திற்கு, அமெரிக்க நாட்டிலும், கனடாவிலும் நீண்ட காலமாக நிலைத்து நிற்கும் ஆட்சி முறையை சுட்டிக்காட்ட முடியும்.

இணைப்பாட்சி தொடர்பில் இந்த 11 கட்சிகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் அப்படி ஒன்றும் பாரதூரமானவை அல்ல. அடிப்படை ஒன்று தான்.

இப்படி இருக்கையில், இந்தக் கட்சிகள் ஏன், இப்போதும் பிரிந்து நிற்கின்றன?

உண்மையைச் சொன்னால், தமிழ் மக்களில் பலரும் ஆத்திரப்படுவார்கள்!

இந்தக் கட்சிகளை வழிநடத்தும் அரசியல் தலைவர்களுக்கு இடையில் உள்ள, ஆளுமை மோதல்கள், தனிநபர் விருப்பு வெறுப்புக்கள், சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் என்பனவற்றோடு, இந்தக் கட்சிகள் சிலவற்றில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் தனி நபர்கள், தம் சொந்த அரசியல் எதிர்காலம் தொடர்பில் கொண்டிருக்கும் சுயநல அபிலாஷைகள் மட்டுமன்றி, பரந்து விரிந்த ஒற்றுமை அணி ஒன்று உருவாகும் இடத்து, இப்போது தம் சொந்தக் கட்சியில் தாம் கொண்டுள்ள அதே முக்கியத்துவத்தை, அந்த ஒற்றுமை அணிக்குள் எதிர்பார்க்க முடியாது என்கின்ற யதார்த்த பூர்வமான சுய மதிப்பீடும், இதற்கான காரணங்களில் அடங்கி நிற்கின்றன என்பதே கலப்படமற்ற உண்மையாகும்.

இச்சந்தர்ப்பத்தில் இன்னொரு விடயத்தையும் சுட்டிக் காட்டியே தீர வேண்டும்.

ஐந்து கட்சிகள் ஓரணி திரண்டு அமைத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில், ஏதோ உன்னதமான ஒற்றுமை நிலவுவதாக தமிழ் மக்களில் யாரும் கனவுலகில் சஞ்சரிக்க கூடாது. அங்கும் நாம் சுட்டிக்காட்டிய சில விடயங்கள், இலைமறை காயாக, 'அரசல் புரசலாக' இன்னும் நிலவிக் கொண்டிருப்பது ஒன்றும் புதுமையானது அல்ல.

**இருந்தும், ஆறுதல் அளிக்கும் விடயம், இந்தக் கூட்டமைப்பின் அரசியல் ஒற்றுமை!**

**இந்நிலையில், இந்த கூட்டமைப்புக்கு வெளியே உள்ள கட்சிகளும் - தமிழ் அரசுக் கட்சி உட்பட - கூட்டமைப்பில் உள்ள கட்சிகளும் கைகோர்த்து ஓர் பரந்த அணியாக பரிணமித்தால் எப்படி இருக்கும்?**

**சாதாரண தமிழ் மக்களின் வார்த்தைகளில் சொல்வதனால், அது 'சோக்கான' விடயம்!**

**இன்னொரு விதத்தில், மிக இனிமையான கனவு..?**

**ஒரு சில கனவுகள் - இனிமையானவை உட்பட - பலிக்கத்தான் செய்கின்றன!**

**ஆசிரியர்**

**தேசியம் பத்திரிகையின்**

**மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME



# காற்றுவழிக் கிராமத்தில் ஒரு கண்ணகியம்மன்

கடந்த வாரம் புங்குடுதீவில் நடந்த கண்ணகியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை நோக்கிப் புலம்பெயர்ந்த தமிழர்கள் நூற்றுக்கணக்கில் திரண்டு வந்தார்கள். 1991ஆம் ஆண்டு தீவில் நிகழ்ந்த இடப்பெயர்வுகளின் பின் புங்குடுதீவை நோக்கி இவ்வளவு தொகையான மக்கள் திரண்டு வந்தமை இதுதான் முதல் தடவை.

அண்மைய ஆண்டுகளில் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இவ்வாறு வெவ்வேறு நிகழ்வுகளை நோக்கி ஒன்றுதிரளக் காணலாம்.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூறாவது ஆண்டுக் கொண்டாட்டம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பரியோவான் கல்லூரி, சில நாட்களுக்கு முன் மெத்தடிஸ்ட் மகளிர் கல்லூரி போன்றன தமது இருநூறாவது ஆண்டு விழாவை கொண்டாடிய போது பழைய மாணவர்களும் உட்பட புலம்பெயர்ந்த தமிழர்கள் அந்த நிகழ்வுகளை நோக்கித் திரண்டார்கள்.

### புலம்பெயர்ந்த தமிழர்கள்

மிகச் செழிப்பாக பண உதவிகளைச் செய்தார்கள். சில பாடசாலைகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் வழங்கும் உதவிகள் கோடிக்கணக்கானவை. கண்ணகி அம்மனுக்கும் அவ்வாறு கோடிக்கணக்காக காசு திரட்டப்பட்டிருக்கிறது. கிடைக்கும் தகவல்களின்படி அக்கோவிலை புனரமைப்பதற்கு கிட்டத்தட்ட 90 கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கோயிலின் ஒவ்வொரு தூணுக்கும் தலா 5 இலட்சம் ரூபாய் புலம்பெயர்ந்த ஊர்வாசிகளிடமிருந்து திரட்டப்பட்டிருக்கிறது. மொத்தம் 200ற்கும் குறையாத தூண்கள் அங்கே உண்டு. கும்பாபிஷேகத்திலன்று ஒரு புலம்பெயர்ந்த தமிழர் கிட்டத்தட்ட ஏழரை இலட்சம் ரூபாய் செலவழித்து பக்தர்கள் அனைவருக்கும் இலவசமாக ஐஸ்கிரீம் விநியோகித்தார்.

### சனத்தொகை பற்றாக்குறை

கடந்த மூன்று தசாப்தங்களின் பின் புங்குடுதீவை நோக்கி ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு வந்த ஒரு நிகழ்வு அது. இலங்கைத் தீவில் மட்டுமல்ல இப்பிராந்தியத்திலேயே ஆளில்லா வீடுகள் அதிகமுடைய ஒரு பிரதேசமாக தீவுப்பகுதியைக் குறிப்பிடலாம்.

குறிப்பாக புங்குடுதீவில் உத்தியோகப்பற்றற்ற தகவல்களின்படி 4000க்கும் சற்று அதிகமான மக்கள் வாழ்வதாக தெரிவிக்கப்படுகிறது. பேராசிரியர் குகபாலன் 4000க்கும் குறைவான மக்களே அங்கே இருப்பதாகக் கூறுகிறார். புங்குடுதீவும் உட்பட பெரும்பாலான தீவுப்பகுதிகளில் சனத்தொகை குறைவு.

ஆளற்ற வீடுகளே அதிகம். ஒரு காலம் தேவாலயங்களின் பட்டினம் என்று வர்ணிக்கப்பட்ட ஊர்காவற்துறை இப்பொழுது கைவிடப்பட்ட வீடுகளின் பட்டினமாக மாறிவிட்டது. அங்கெல்லாம் பழம்பெரும் வீடுகளைச் சூழ்ந்து காடு வளர்ந்து கிடக்கின்றது.

அப்படித்தான் நெடுந்தீவிலும். தீவுகளில் சன நடமாட்டம் குறைந்த காரணத்தால் அங்கே குற்ற செயல்களுக்கான வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன.

### வித்யா படுகொலை சம்பவம்

புங்குடுதீவில் வித்யா படுகொலை, நெடுந்தீவில் புலம்பெயர்ந்தவர்களும் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டமை, அனலைதீவில் புலம்பெயர்ந்த தமிழர் கொல்லப்பட்டமை போன்றவற்றை இங்கு சுட்டிக்காட்டலாம். தீவுகள் இடம்பெயரத் தொடங்கியது போரினால் மட்டும் அல்ல. பொருளாதாரக் காரணங்களுக்காகவும்தான்.

குடிநீர் ஒரு முக்கிய பிரச்சினை. அதுதவிர கல்வி, மருத்துவ,தொழிற் தேவைகளுக்காகவும் மக்கள் அங்கிருந்து இடம்பெயர்த்தார்கள். இப்பொழுதும் இடம்பெயர்கிறார்கள். அயலில் ஆட்கள் இல்லையென்றால் தனித்து விடப்பட்ட வீடுகளுக்கு இயல்பாகவே பயம் தொற்றிக் கொள்ளும். அது மேலும் இடப்பெயர்வை ஊக்குவிக்கும்.

போர், இடப்பெயர்வை வாழ்வின் ஒரு பகுதியாக்கியது. போர்க்காலத்தில் மக்கள் தொகையாக இடம்பெயரும் ஒரு போக்கு முதலில் தீவுகளில்தான் தொடங்கியது. முதலில் காரைநகர்.

### காற்றுவெளிக் கிராமம் மக்கள் இடப்பெயர்வு

அதன்பின் லைடன்தீவுகள் என்று அழைக்கப்படும் ஊர்காவற்துறையும் உள்ளிட்ட தீவுகள். முடிவில் முழு யாழ்ப்பாணமும் இடம்பெயர்த்தது.

இவ்வாறு ஆளற்றுப்போன தீவுகளைப்பற்றி புங்குடுதீவைச் சேர்ந்த கவிஞர் சு.வில்வரத்தினம் எழுதிய கவிதைத் தொகுப்புக்குப் பெயர் “ காற்றுவெளிக் கிராமம்” தீவுகளில் இருந்து மக்கள் மேலும் வெளியேறுவார்களாக இருந்தால் அங்கு ஒரு மாகாண சபை உறுப்பினரைக்கூட தெரிவு செய்வதற்கு ஆட்கள் இல்லாமல் போய்விடும்.

ஒரு காலம் அங்கே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்யுமளவுக்கு 36 ஆயிரத்துக்கும் குறையாத வாக்காளர்கள் வசித்தார்கள். எனவே தீவுகளை நோக்கி எப்படி ஆட்களை கொண்டு வரலாம் என்று சிந்திப்பதே தீவுகளில் இருந்து புலம்பெயர்ந்த மக்கள் முன்னால் உள்ள முக்கிய பொறுப்பாகும்.

### அபிவிருத்தி திட்டங்கள்

ஒரு நாள் திருவிழாக்கள்,சில நாள் கொண்டாட்டங்களை நோக்கி மக்களைத் திரட்டுவதற்கு மப்பால், தமது தாய்க் கிராமத்தை நோக்கி என்றென்றும் மக்கள் திரளக்கூடிய பொருளாதாரத் திட்டங்களை வகுக்க வேண்டும். தமிழ்ப் புலப்பெயர்ச்சியின் தொடக்க காலத்திலேயே தீவுகளைச் சேர்ந்தவர்கள் அதிகமாகப் புலம்பெயர்ந்தார்கள்.

அவர்களில் சிலர் தமது சொந்தத்தீவுகளில் தனிப்பட்ட முறையில் தங்களால் இயன்ற அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்திருக்கிறார்கள். எழுவைதீவில் மருத்துவர் நடேசன் கட்டிய வைத்தியசாலை அனலைதீவின் நீட்சியாகவுள்ள புளியந்தீவில், ஒரு வீடமைப்புத் திட்டம், புங்குடுதீவில் சுற்றுச்சூழல் மேம்பாட்டு திட்டங்கள் போன்ற சில உதாரணங்களை இங்கு சுட்டிக்காட்டலாம்.

வடமாகாணசபை இயங்கத் தொடங்கிய போது, முதலமைச்சரிடம் யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் பா.அகிலன் தீவுகளை மையமாகக் கொண்ட ஒரு சுற்றுலாத் திட்டத்தை முன்வைத்தார்.

### தீவுகளின் தனித்துவ பாரம்பரியம்

ஒவ்வொரு தீவிலும் எது தனித்துவமானதோ, அதை மையமாகக் கொண்டு சுற்றுலா வலையமைப்பு ஒன்றை உருவாக்குவது ஒவ்வொரு தீவிலும் என்னென்ன பாரம்பரிய உணவு வகைகள் கிடைக்குமோ அவற்றுக்குரிய உணவகங்களை உருவாக்குவது தீவுகளை இணைக்கும் படகுச்சேவைகளை அல்லது மிதக்கும் விருந்தகங்களை உருவாக்குவது.

ஆனால் அத்திட்டத்தை வடமகாணசபை அதிகாரிகள் ஆர்வத்தோடு அணுகவில்லை என்று தெரிகிறது. அதுபோலவே சில ஆண்டுகளுக்கு முன் மூன்று தீவுகளை மையமாகக் கொண்டு மீளப்புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது.

அந்தத் திட்டம் முதலில் சீனாவிடம் கொடுக்கப்பட்டது. பின்னர் இந்தியாவின் எதிர்ப்புக் காரணமாக அது இந்தியாவுக்கு வழங்கப்பட்டது. நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய மூன்று தீவுகளிலும் அவ்வாறு மீளப்புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்கள் நிறுவப்படும்.

ஆனால் இந்தியா அத்திட்டங்களைப் பொறுப்பெடுத்த பின் இலங்கை அரசாங்கம், நிர்வாக மற்றும் தொழில் நுட்ப ரீதியிலான முட்டுக்கட்டைகள் உருவாக்கிவருவதாகச் ஒரு தகவல் தீவுகளை மையமாகக் கொண்டு ஏற்கனவே உருவாக்கப்பட்ட கடலட்டை பண்ணைகளும் விவாதப்பொருட்களாக மாறின.

### புவிசார் அரசியல் போட்டி

கடலட்டை, மீளப்புதுப்பிக்கும் எரிசக்தித் திட்டங்கள் போன்றவற்றின்மூலம் தீவுப்பகுதியின் சனக்கவர்ச்சி அதிகரிக்குமா என்று தெரியவில்லை. ஆனால் புவிசார் அரசியல் போட்டிக்குள் தீவுகளும் சிக்குண்டு விட்டன என்பது மட்டும் தெரிகின்றது. தீவுகளுக்கென்று தனித்துவம் உண்டு.

அதில் முக்கியமானது, தீவுகளில் இருந்து எழுச்சிபெற்ற கவர்ச்சிமிகு வணிகப் பாரம்பரியம் ஆகும். தீவுகளைச் சேர்ந்த வணிகர்கள் முறைசார் படிப்புக்களுக்கூடாக வந்தவர்கள் அல்ல. ஆனால் பரம்பரை பரம்பரையாக திரட்டப்பட்ட பட்டறிவுக்கூடாக பெரு வணிகர்களாக எழுந்தவர்கள்.

தீவுகளுக்கேயான தனித்துவம்மிக்க, நூதனமான அந்தப் பட்டறிவை முறைசார் புலமைப் பரப்புக்குள் உள்வாங்கினால் என்ன? தீவுகளை மையமாகக் கொண்டு வணிகக் கல்லூரிகளை உருவாக்கினால் என்ன? எதைச் செய்தால் தீவுகளை சனக்கவர்ச்சி மிக்கவைகளாக மாற்றலாம்? ஒவ்வொரு ஆண்டும் நயினாதீவை நோக்கி இலட்சக்கணக்கானவர்கள் வருகிறார்கள்.

ஆனால் அவர்கள் எல்லாரும் வில்வரத்தினத்தின் காற்று வெளிக் கிராமங்களை கடந்துதான் போகின்றார்கள். கண்ணகியம்மன் கோவில் கும்பாபிஷேகத்திற்காக உள்ளூரில் வேலைக்கு ஆட்களைப் பெற்றுக்கொள்வதில் நிறையத் தடைகள் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

### தமிழர் சமூகத்தின் நிலையற்ற கதி

கோயிலைத் துப்புரவாக்குவதற்கு உள்ளூரில் ஆட்களைப் பிடிப்பது கஷ்டமாக இருந்ததாம். தீவுகளில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் நிலைமை அதுதான். சுவாமி தூக்க ஆளில்லை. சில ஆண்டுகளுக்கு முன் புங்குடுதீவில் வில்வரத்தினத்தின் நினைவு நாளைக் கொண்டாடினார்கள்.அம்பலவாணர் அரங்கில் கால்வாசிக்குக்கூட மக்கள் நிரம்பவில்லை.

அதிலும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்களே அதிகம். ஆனால் நீண்ட ஆண்டுகளின் பின் கண்ணகியம்மன் கோயிலை நோக்கி புங்குடுதீவு மீண்டும் திரண்டு வந்திருக்கிறது. கண்ணகியம்மன் கோவிலுக்கு வேறு ஒரு முக்கியத்துவமும் உண்டு. 1971 ஆம் ஆண்டு அங்கு நடந்த சாதி எதிர்ப்புப் போராட்டம் பிரசித்தமானது.

ஈழத் தமிழர்கள் மத்தியில் தோன்றிய மிக முக்கியமான சிந்தனையாளர்களில் ஒருவரும் வில்வரத்தினத்தின் ஆசிரியருமான மு.தளையசிங்கம் அப்போராட்டத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அங்குள்ள கிணற்றில் சாதிரீதியாகத் தாழ்த்தப்பட்டவர்கள் நீர் அள்ளுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அதை எதிர்த்துத் தளையசிங்கம் போராடினார்.

ஒருகாலம் சாதிரீதியாக தாழ்த்தப்பட்டவர்களை ஆலையங்களுக்குள் அனுமதிக்க மறுத்தவர்களுக்கும் குடி நீர்க்கிணறுகளைத் தடுத்தவர்களுக்கும் எதிராகப் போராட வேண்டியிருந்தது.

ஆனால் இன்றைக்கு அவ்வாறு தடுத்தவர்களின் ஆளில்லா வீடுகளில் சாதி ரீதியாக தாழ்த்தப்பட்ட மக்களே வந்து குடியிருக்கும் ஒரு நிலை.

ஆனால் அந்த வீடுகளை அதில் இப்பொழுது குடியிருப்பவர்களுக்கு சொந்தமாக எழுதிக் கொடுப்பதற்கு வீட்டின் உரிமையாளர்கள் தயாரில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அதேசமயம் ஊர்காவற்துறை கரம்பன் மேற்கில் புலம்பெயர்ந்த தமிழர்கள் இருவர் தமது காணிகளை 12 காணியில்லாத குடம்பங்களுக்குப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்கள்.

எனினும், பூதங்காக்கும் காணிகள் பலவற்றை அவ்வாறு கொடுப்பதற்கு மனமில்லாத ஒரு தொகுதியினர் பங்குத் தந்தையிடமும் ஆயர் இல்லத்திடமும் தமது காணி உறுதிகளை கொடுத்து வைத்திருப்பதாக ஒரு புலம்பெயர்ந்த தமிழர் குற்றஞ்சாட்டினார்.

ஒருபுறம் தமிழ்ச் சமூகத்தில் நிலமற்ற வீடற்ற மக்கள். இன்னொரு புறம் புதர் மண்டிக் கிடக்கும் பெரு மாளிகைகள். ஒருபுறம் தேவையோடு தவிக்கும் தாயக மக்கள்.

### வாழ்வாதார பிரச்சினை

இன்னொருபுறம் தாயகத்தைப் பிரிந்த பிரிவேக்கத்தோடு காசை என்ன செய்வது என்று தெரியாமல் கொட்டிச் சிந்தும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம்.

நாட்டைப் பிரிந்த பிரிவேக்கத்தோடு நாட்டுக்கு எதையாவது செய்ய வேண்டும் என்று புலம்பெயர்ந்த தமிழர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால் அவர்களிடம் உள்ள அளவற்ற செல்வத்தையும் தாயகத்தில் காற்றுவெளிக் கிராமங்களின் தேவைகளையும் பொருத்தமான அபிவிருத்தி திட்டங்களின்மூலம் இணைப்பதற்கு யார் உண்டு? குறிப்பாக, புங்குடுதீவில் குடிநீர் ஒரு பிரச்சினை.

ஒரு சிறிய குடிநீர்ச் சுத்திகரிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு கிட்டத்தட்ட 40 இலட்சம் வரை தேவை என்று கணிப்பிடப்படுகிறது. கண்ணகியம்மனுக்காக செலவழிக்கப்பட்ட தொகையோடு ஒப்பிட்டால் இது மிகச்சிறியது.

கோவில் தூண் ஒன்றுக்காக காசு கொடுத்த எட்டுப் பேர் சேர்ந்தால் ஒரு நீர் விநியோகத் திட்டத்தை நிறுவலாம். புங்குடுதீவு மருத்துவமனையில் இப்பொழுதுள்ள மூன்று மருத்துவர்கள் உண்டு. அவர்களில் ஒருவர் சிங்களவர். அவர்தான் பொறுப்பதிகாரி. அண்மை ஆண்டுகளில் அவ்வாறு சிங்கள மருத்துவர்கள் தீவுகளுக்கு நியமிக்கப்படும் ஒரு நிலைமை. சிங்கள மருத்துவர்கள்தான் அதற்குத் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

### ஆசிரியர்கள் பற்றாக்குறை

கணித விஞ்ஞான பிரிவுகளைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அங்கே குறைவு.

பிள்ளைகள் யாழ்ப்பாணம் நகரத்துக்குத்தான் வர வேண்டும். அல்லைப்பிட்டியில் கிறீஸ்தவ திருச்சபையினரால் கட்டப்பட்ட ஒரு சர்வதேசப் பாடசாலை உண்டு. அது மதம் மாற்றும் நோக்கத்தோடு கட்டப்பட்டது என்று சில இந்துக்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள்.

அப்படியென்றால் கோவில்களைப் புனரமைக்கும் காசில் பள்ளிக்கூடங்களைக் கட்டலாம். அறப்பணிகளைச் செய்யலாம். நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவலாம். தீவுகளின் சனக்கவர்ச்சியைக் கூட்டலாம். புலம்பெயந்த தமிழர்களையும் தாயகத்தையும் ஒருங்கிணைப்பது அல்லது தேவைகளையும் வளங்களையும் ஒருங்கிணைப்பது என்பது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதிதான்.



நிலாந்தன்

இலட்சியத்திற்கான பயணத்தில் எதிரிகளை வீழ்த்துவதற்காகவோ, அல்லது அடக்கப்பட்ட இனத்தில் ஒரு எழுச்சியை ஏற்படுத்துவதற்காகவோ, ஒருவர் தம் உயிரையே அர்ப்பணிப்பாரெனில் அவரைத் தற்கொலைப்படைப் போராளி என உலகம் வரையறை செய்கிறது.

வெற்றி அல்லது வீர மரணம் என்பது தான் இந்த வீரனின் குறிக்கோளாக இருந்தது. வீரன் சுந்தரலிங்கத்தை வீழ்த்திவிட்டால் தமிழ்நாட்டின் பாஞ்சாலங்குறிச்சி நம் கையில் என்று ஆங்கிலேயர் கும்மாளமிட்டனர். ஆனால் கோட்டைக் கதவுகளை திறந்து ஆங்கிலேயரையும் கூலிப்படையினரையும் வெட்டி வீழ்த்தினார் வீரன் சுந்தரலிங்கம் .

வெள்ளையர்களை வெறும் வாளுடன் சமாளிப்பது எப்படி என யோசித்த வீரன் சுந்தரலிங்கம் பீரங்கிக் குண்டுகளுக்குப் பயன்படுத்தும் வெடிமருந்தக்கிடங்கை அழித்துவிட்டால் ஆங்கிலேயரின் கொட்டத்தை அடக்கிவிடலாம் எனக் கணித்தார்.

### இந்திய சுதந்திரப் போரில் முதல் தற்கொலைப் படை தாக்குதல் :

தனது வீரத்தாலும் மதி நுட்பத்தாலும் சீக்கிரமே கட்டபொம்மனின் அனைத்துப் படைகளுக்கும் தளபதியாக உயர்ந்தார் சுந்தரலிங்கம்.

சுந்தரலிங்கத்தின் பொறுப்பில்தான் கட்டபொம்மனின் தானியக்கிடங்கும், வெடிமருந்துக் கிடங்கும் இருந்தன.

கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் முட்டல், உரசல் உருவானபோது வெள்ளையத்தேவனும், சுந்தரலிங்கமும் கட்டபொம்மனுக்கு பக்கபலமாக விளங்கினர்.

கட்டபொம்மனை பல நாட்கள் அலைக்கழிய வைத்து ராமநாதபுரம் அரண்மனையில் ஜாக்சன் துரை சந்தித்தபோது சுந்தரலிங்கமும் உடனிருந்தார்.

அந்தச் சந்திப்பு பின்பு பெரும் சண்டையாக மாறியபோது தனது வாளால் பல வெள்ளைச் சிப்பாய்களை வீழ்த்தினார். இதையடுத்து கட்டபொம்மனை அழிக்க வெள்ளையர்கள் 1799ல் பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுத்தார்கள். ஆங்கிலேயப் படை பாஞ்சாலங்குறிச்சிக்கு வெளியே கரிசல் காட்டில் முகாமிட்டிருந்தது.

பீரங்கிகள், வெடிகுண்டுகள், துப்பாக்கிகளுடன் வெள்ளையர்களின் படை குவிந்திருந்தது.

1799 செப்டம்பர் 8ம் தேதி சுந்தரலிங்கம் தனது முறைப்பெண்ணான வடிவுடன் ஆடு மேய்ப்பவர்களைப் போல வேடமணிந்து, வெள்ளையர்களின் வெடிமருந்து கிடங்குப் பகுதிக்குப் போனார். தீப்பந்தத்தைக் கொளுத்தியபடி சுந்தரலிங்கமும், வடிவும் வெடிமருந்துக் கிடங்கிற்குள் பாய்ந்தார்கள். பலத்த வெடிச்சத்தத்துடன் கிடங்கு தீப்பிடித்து எரிந்தது.

சுந்தரலிங்கமும், வடிவும் இந்திய சுதந்திரப் போரின் முதல் தற்கொலைப் படை தாக்குதல் தொடுத்தவர்களானார்கள். அவர்களது வீர மரணத்திற்கு அடுத்த நாள் நடைபெற்ற போரில் பாஞ்சாலங்குறிச்சி ஆங்கிலேயர் வசமானது.

பாங்சாலங்குறிச்சி கோட்டையை தன் உயிர் இருக்கும் வரை அன்னியன் கையில் விடமாட்டேன். நாட்டுக்காக நாட்டு மக்களுக்காக என் உடல் பொருள் ஆவியை இழக்கத் தயாராக இருக்கிறேன் என்று முழக்கமிட்டபடி மாவீரன் வீரமரணம் அடைந்தான்.

### இளமையில் வீரன் சுந்தரலிங்கம் :

வீரன் சுந்தரலிங்கம் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஓட்டப்பிடாரம் அருகில் கவர்னகிரி என்னும் கிராமத்தி சித்திரை பௌர்ணமி அன்று 1770 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் நாள் காலாடி என்ற கட்டக் கருப்பணனுக்கும் முத்திருளி அம்மாளுக்கும் பிறந்தார்.

இளமையில் வீர விளையாட்டக்களைக் கற்ற குறும்பும், அறிவு நுட்பமும் துணிச்சலும் சுந்தரலிங்கத்திடம் இருந்தன. கவர்னகிரியில் கிடைக்கு மந்தை போடும் இடங்களில் ஒரு கும்பல் ஆடுகளை திருடிக்கொண்டே இருந்தது.

இதைக் கேட்ட சுந்தரலிங்கம் வெகுண்டெழுந்து, தானே ஆடு திருட்டு தடுப்புப் படைக்கு தலைமையேற்கிறேன் என்று சபதமேற்று ஆட்டுத் திருட்டை ஒழித்தார். இதனால் ஆடுகள் திருட்டை ஒழித்த வீரன் சுந்தரலிங்கத்தின் பெயர் கவர்னகிரியையும் தாண்டி பக்கத்து கிராமங்களுக்கும் பரவியது.

அக்காலத்தில் பெரும் வீரர்களாக விளங்கிய பெரிய காலாடி, சின்னக் காலாடி மாடக் குடம்பனார், மொட்டை சங்கரன் காலாடி போன்றவர்களிடம் அனைத்து கலைகளையும் கற்றுத்




**மாவீர தியாகங்களால் உயிர்பெற்றதே ஈழமண். இந்த ஈகத்தில் உச்சம் தொட்ட தியாகமே உயிர்க்கொடை. தன் மண்ணிற்காக, மக்களுக்காக உயிர்க்கொடை தந்த உறுதிப் பூக்களை ஒவ்வோர் ஆண்டும் தமிழர் தாயகத்திலும், புலம் பெயர் மண்ணிலும் ஜூலை ஐந்தில் நினைவு கூறப்படுகின்றனர். இதனையிட்டு இச்சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது**

தேர்ந்த சுந்தரலிங்கம், கவரினகிரி தற்காப்புப் படைப்பள்ளிக்கு தலைவராக நியமிக்கப்பட்டார்.

### கட்டபொம்மன் வளர்த்த வீரன்:

சுந்தரலிங்கத்தின் வீரத்தைத் தனது அமைச்சர் தானாவதிப் பிள்ளையின் மூலம் கேள்விப்பட்ட கட்டபொம்மன் அவரைச் சந்தித்தே தீர வேண்டும் என்று ஆர்வமாக இருந்தார். அதோடு அவரை எல்லைப் பகுதியை கண்காணிக்கப் படையில் சேர்த்துக் கொள்ள விரும்பினார்.

வீரன் சுந்தரலிங்கத்தின் கீரத்தையும் நேர்மையையும் பரிசோதிக்க வெள்ளையத் தேவனும் கட்டப்பொம்மனும் மாறுவேடத்தில் சென்றனர். இவர்களின் செயல் திட்டத்தின்படி அமைச்சர் தானாவதிப்பிளிளை தூத்துக்குடி மாவட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கும் ஓட்டப்பிடாரத்திலுள்ள பாஞ்சை கிராமத்தில் தன்னுடைய நண்பர் வீட்டில் சுந்தரலிங்கத்தை தங்க வைத்திருந்தார்.

அப்போது வீட்டின் உரிமையாளர் வீட்டை பார்த்திருக்கும்படி வீரன் சுந்தரலிங்கத்திடம் கூறிவிட்டு சென்றவர் நீண்ட நேரமாகியும் வரவில்லை. இந்த நேரத்தில் கட்டப்பொம்மனும் வெள்ளையத்தேவனும் நாங்கள் தான் வீட்டின் உரிமையாளர்கள் என்று அறிமுகம் செய்து அதே வீட்டிற்குள் நுழைந்தனர். சிறுது நேரத்தில் வீட்டிலிருக்கும் நகைகளைத் திருடிக்கொண்டு வெளியேற அவர்களைக் கையும் களவுமாகச் சுந்தரலிங்கம் பிடித்தார்.

நீங்கள் இந்த கீட்டின் உரிமையாளர் இல்லை என்பது எனக்குத் தெரியும் நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்று தான் கவனத்தோடு பார்த்துக் கொண்டே இருந்தேன். நான் நினைத்தபடியே நீங்கள் திருடர்கள் தான் என்று சொல்லி வாளை உருவினார் வீரன் சுந்தரலிங்கம்.

அதற்கு அவர்கள் நாம் மூவர் மட்டுமே இங்கே இருக்கிறோம். நகைகளைச் சரிபாகமாக பங்கிட்டு கொள்ளலாம் என ஆசை காட்டினார்கள். இதைச் சம்மதிக்காத வீரன் சுந்தரலிங்கம் உயிர்மீது உங்களுக்கு ஆசை இல்லையா என்று வாளை எடுக்க மாறுவேடத்தை வீரபாண்டிய கட்டபொம்மனும் வெள்ளையத் தேவனும் கலைத்தனர்.

### வெகுண்டெழுந்த வீரபாண்டிய கட்டப்பொம்மன் :

தனது சோதனையில் வெற்றிப் பெற்ற வீரன் சுந்தரலிங்கத்தைப் பாஞ்சாலங்குறிச்சி அரசபையின் ஒற்றர் படைத் தளபதியாக அறிவிக்கிறேன் என்று கட்டபொம்மன் கூறினார்.

திருநெல்வேலி கலெக்டர் ஜாக்சன் கட்டப்பொம்மனிடம் சமாதானம் பேச அழைத்தார். அப்போது ஜாக்சன் வரி விஷயத்தைக் கிளர வெகுண்டெழுந்த வீரபாண்டிய கட்டப்பொம்மன் வானம் பொழிகிறது பூமி விளைகிறது. உனக்கு ஏன் தரவேண்டும் கிஸ்தி, வரி என்று வீர முழக்கமிட்டார்.

மோதல் ஏற்படவே ஜாக்சன் துரை கட்டப்பொம்மனையும் அவனது ஆட்களையும் கைது செய்ய உத்தரவிட்டார். வெள்ளையர்கள் சதித்திட்த்தை அறிந்து ஆயுதங்களுடன் மாறுவேடத்தில் வந்து வெள்ளை சிப்பாய்களைக் கொன்று குவித்தார் வீரன் சுந்தரலிங்கம்.

அவரது வாள் வீச்சில் ஏராளமானோர் உயிரை இழந்தனர். தலை தப்பியது போதும் என அஞ்சி ஓடினார் ஜாக்சன் துரை. ஆனால் அவருடன் ஓடிய லெப்டினன்ட் கிளார்க்கை வீரன் சுந்தரலிங்கம் வாளால் வெட்டிச் சாய்த்தார்.

பாஞ்சாலங்குறிச்சி அரண்மனையில் கரியப்பன் என்ற கூலியாள் எட்டையபுரம் அரண்மனைக்கு ஒற்றனாகச் செயல்பட்டு வந்ததைக் கையும் களவுமாகப் பிடித்தார். இதற்கு காமாட்சி என்ற அவரது காதலியும் கரியப்பனின் மனைவியும் உதவி செய்தார்ள். எட்டையபுரம் எட்டப்பரின் பட்டத்துக் கதிரையைக் கவர்ந்து வர திட்டமிட்டார் வீரபாண்டிய கட்டபொம்மன்.

அந்த வேலை வீரன் சுந்தரலிங்கத்தின் தந்தை கட்டக் கருப்பணனிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்பா கடத்திவரப்பட்ட எட்டையபுரத்தின் பேய் குதிரை என்று அழைக்கப்பட்ட அந்த பட்டத்து குதிரை யாருக்கும் கட்டுப்படாமல் சண்டித்தனம் செய்து வந்தது. அக்குதிரையை அடக்க நினைத்தார் கட்டப்பொம்மன்.

### எட்டையபுர மாவீரன் சுந்தரலிங்கம் :

பொங்கல் திருவிழா அன்று வீரஜக்கம்மா கோவில் வளாகத்தில் ஜல்லிக் கட்டின் போது காளைகளுடன் அந்தக் குதிரையையும் இறக்கிவிட முடிவெடுத்தார். இந்தக் குதிரையை அடக்குபவர்களுக்கு அக்குதிரையையே பரிசாக வழங்கப்படும் என அறிவித்துக் களத்தில் இறங்க அக்குதிரையை அடக்க யாரும் முன் வரலில்லை மேடையில் இருந்த வீராபாண்டிய கட்டப்பொம்மனும் தளபதியும் திகைத்தனர்.

எட்டையபுரம் பட்டத்துக் குதிரையை அடக்க பாஞ்சாலங்குறிச்சியில் யாருமே இல்லையா? வீரக்கேள்வியைக் கேட்டுக் கொண்டே வீரன் சுந்தரலிங்கத்தை பார்த்தார் கட்டப்பொம்மன். மன்னர் உன் வீரத்தை உலகறியும் படி செய்ய விரும்புகிறார் என்று அமைச்சர் தானாபதி பிள்ளை கூற, அடுத்த நிமிடமே குதிரையை அடக்க களத்தில் நின்றார். மாவீரனைக் கண்டு கூட்டத்தினர் ஆரவாரம் செய்தனர். அந்தப் பேய்க் குதிரையை மடக்கிப்பிடித்து அதன் முதுகில் ஏறி அமர்ந்த அடக்கினார். குதிரைப் பெட்டிப்பாம்பாக அடங்கிப்போனது.

மாவீரன் சுந்தரலிங்கம் வாழ்க! வாழ்க!! வாழ்க!!! என்று கோஷம் விண்ணைப்பிளக்க கட்டபொம்மன் மேடையை விட்டிறங்கி தனது தளபதியைக் கட்டித் தழுவினார். முதன் முறையாக சொந்த ஊர் செல்லும் வீரன் சுந்தரலிங்கத்திற்கு வீரப்பதக்கங்களை அணிவித்து ராஜ மரியாதைச்செய்யும் விதமாக தனது குதிரைப் படையின் ஒரு பிரிவையும் அவருடன் அனுப்பி வைத்தார் கட்டபொம்மன்.

### ஆங்கிலேயரை எதிர்த்த வீரத் திருமகன்:

ஆங்கிலேயருக்கும் பாஞ்சாலங்குறிச்சி சமஸ்தானத்திற்கும் நேரடிப்போர் நடந்தது. முதல் நாள் போரில் திறமை முழுவதையும் காட்டிப் போரிட்டு வெள்ளைத் தேவன் வீரமரணம் அடைந்தார். அன்றையப்போரில் விழுப்புண் பட்டு வீழ்ந்த ஊமைத்துரை வீரத்தாய் ஒருவரால் காப்பாற்றப்பட்டு சிவகங்கைச் சீமைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

கட்டப்பொம்மன் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையில் இருப்பது ஆபத்து என்று நாகலாபுரத்திலிருந்து தப்பி புதுக்கோட்டை தொண்டமானிடம் தஞ்சம் புகுந்ததாகவும் ஆனால் தொண்டமான் கட்டப்பொம்மனை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்ததாகவும் வரலாறு கூறுகிறது. வீரன் சுந்தரலிங்கம் உயிருக்கு பயந்து எங்கும் தப்பித்து ஓடவில்லை.

வெற்றி அல்லது வீர மரணம் என்பது தான் வீரனின் குறிக்கோளாக இருந்தது. சுந்தரலிங்கத்தை வீழ்த்திவிட்டால் பாஞ்சாலங்குறிச்சி நம் கையில் என்று கும்மாளமிட்டனர். கோட்டைக் கதவுகளை திறந்து ஆங்கிலேயரையும் கூலிப் படையினரையும் வெட்டி வீழ்த்தினார்.

ஆங்கிலேயர்கள் அவரை நெருங்கப் பயந்தார்கள் தனியொருவனாக இருந்தும் எதிரியிடம் சரணடையாமல் தொடர்ந்த போரிட்டார். மூன்று நாள் போரில் சாதித்துக் காட்டினார் வீரன் சுந்தரலிங்கம். நான்காம் நாள் போரில் சொந்த வீரர்களுடன் இருந்து வீரன் சுந்தரலிங்கத்திற்கு சோதனைகள் நெருங்கின. இனியும் சிறுபடையுடன் போராட முடியாது என உணர்ந்த அவர் ஆங்கிலேய ஆயுத பலத்தை அழிக்கத் திட்டமிட்டார்.

வெள்ளையர்களை வெறும் வாளுடன் சமாளிப்பது எப்படி என யோசித்த வீரன் சுந்தரலிங்கம் பீரங்கிக் குண்டுகளுக்குப் பயன்படுத்தும் வெடிமருந்தக்கிடங்கை அழித்துவிட்டால் ஆங்கிலேயரின் கொட்டத்தை அடக்கிவிடலாம் எனக் கணித்தார். வெடிமருந்து கிடங்கை அழிக்கத் திட்டமிட்டு ஆட்டு மந்மையை ஆவாரங்காடு வழியாக ஓட்டி வந்து கிடங்கிற்கு முன் நிறுத்தி விடச் சொன்னார்.

வீரன் சுந்தரலிங்கம் நுழைவாயிலில் எரிந்து கொண்டிருந்த திப்பந்தத்தை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றார். இதைப்பார்த்த வெள்ளையச் சிப்பாய்கள் மிரண்டார்கள்.

வெடிமருந்த கிடங்கின் உள்ளே வீரன் சுந்தரலிங்கம் வெளியில் கொந்தளிப்புடன் வெள்ளையர் இருப்பதைக் கண்டு மெய்சிலித்தார் வீரன். பாஞ்சாலங்குறிச்சியைக் காப்பாற்றுவது ஒன்றையே மனதில் கொண்ட வீரன் வெடிமருந்து கிடங்கை ஒரு முறைப்பார்வையிட்டான்.

அடுத்த நொடியே வெடிமருந்து பெட்டிகள் ஒன்றன்பின் ஒன்றாக வெடித்து சிதறின. அக்னி ஜுவாலையின் வெம்மைத்தாங்காமல் நூற்றுக்கணக்கானச் சிப்பாய்கள் உடல் கருகி செத்தனர். பாங்சாலங்குறிச்சி கோட்டையை என் உயிர் இருக்கும் வரை அன்னியன் கையில் விடமாட்டேன். நாட்டுக்காக நாட்டு மக்களுக்காக என் உடல் பொருள் ஆவியை இழக்கத் தயாராக இருக்கிறேன் என்று முழக்கமிட்டபடி மாவீரன் வீரமரணம் அடைந்தான்.

ஆங்கிலேயப் படைகளால் வெல்ல முடியாத அந்த மாவீரனின் உயிர் விடுதலைக்கான வேள்வியில் வெடிமருந்து கிடங்கில் அடங்கியது. 08.09.1799 அன்று வீரமரணம் அடைந்தார். மாவீரன் சுந்தரலிங்கம் பிறந்த கவர்னகிரி கிராம மண்ணை இன்றும் மக்கள் வீரமண்ணாகப் பாவித்து பிறந்த குழந்தைகளுக்கு அந்த மண்ணை ஊட்டி வருகின்றனர். அந்த வீரமண்ணைத் தொட்டிலுக்குக் கீழேயும் கொட்டி வைக்கின்றனர். மாவீரன் சுந்தரலிங்கத்தை போன்றே வீரத்துடனும், விவேகத்துடனும் வளர்வார்கள் என்பது இப்பகுதி மக்களிடையே காலம் காலமாய் இருந்து வருமூ நம்பிக்கை. உலக வரலாற்றிலேயே தற்கொலைப்படை பிரிவு என்று ஒரு தனிப் படையை தொடங்கி அதற்கு தன்னையும் தன் முறைப்பெண் வடிவையும் பலியாகத் தந்தவர் மாவீரன் சுந்தரலிங்கம்.

இந்தியாவின் ஒரு தென்மூலையில் சுடராய் கொழுந்த விட்டு எரிந்த அடிமை தனத்திற்கு எதிராகப் போராடிய மாவீரன் சுந்தரலிங்கத்தின் பங்கை யாராலும் இனி மறைக்க முடியாது.

### தமிழ் வீரனுக்கு வெண்கலச் சிலை:

தளபதி சுந்தரலிங்கம் அவர்களின் நினைவாக பிப்ரவரி 23, 2014 அன்று தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி - எட்டயபுரம் சாலை சந்திப்பில் ஏழு அடி உயர வெண்கலச் சிலை ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது.

1997இல் இவரது நினைவாக ஒரு போக்குவரத்துக் கழகத்துக்கு தமிழக அரசு பெயர் சூட்டியது. பின்னர் அனைத்து மாவட்டப் போக்குவரத்துக் கழகத்திற்கும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் எனப் பொதுப்பெயரிடப்பட்டது. அத்துடன் தமிழ் வீரனுக்கு நினைவாக முதுகுளத்தூரில் இவருக்கு ஒரு சிலை வைக்கப்பட்டுள்ளது.

**– ஐங்கரன் விக்கினேஸ்வரா–**

# தமிழகத்துக்கு தலைவர் ஆவாரா தளபதி விஜய்?

தமிழகத்தில் சினிமாவும், அரசியலும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்திருப்பதை யாருமே மறுக்க முடியாது. சினிமாவுக்கும் அரசியலுக்கும் இடையேயான பந்தம் சுதந்திரப் போராட்டத்தின் போது தொடங்கியது. கொஞ்சம் கொஞ்சமாக அரசியலுக்கான பாதையை வகுத்த சினிமா திராவிட இயக்க ஆட்சிக் காலத்தில் உச்சகட்டத்தை எட்டியது.

காமராஜருக்குப் பிறகு பேரறிஞர் அண்ணா தொடங்கி கருணாநிதி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா என தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த பலரும் திரைத்துறையை சேர்ந்தவர்களே.

அந்த வரிசையில் இணையத் துடித்து அரசியலுக்கு வந்த நடிகர்களும் பலர். விஜயகாந்த், சரத்குமார், கார்த்திக், சீமான், கருணாஸ் உள்ளிட்டோர் தனியாகக் கட்சி தொடங்கி அரசியலில் குதித்தனர்.

மக்கள் நீதி மய்யம் என்ற கட்சியை தொடங்கி உலகநாயகன் கமல்ஹாசனும் அரசியலில் தடம் பதித்து விட்டார். ”வருவாரா, மாட்டாரா? என்று தொடங்கிய பல்லாண்டு கால கேள்விக்கும் “இல்லை“ என்ற பதிலை உதிர்த்து ”சூப்பர் ஸ்டார்“ ரஜினிகாந்தும் அமைதி ஆகிவிட்டார்.

தமிழகத்தில் திராவிடக் கட்சிகளை தாண்டி “வாய்ப்பில்லை ராஜா…“ என்று சீமான் ஸ்டைலில் சொல்லும் அளவுக்கு அரசியலில் நிலைமை இருக்கிறது.

ஆனாலும் முன்பு திரை உலகில் இருந்து ஒரு மெதுவாக ஒலித்த குரல் இப்போது சத்தமாகவே ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. அந்த வகையில் ”தளபதி” என்று ரசிகர்களால் அழைக்கப்படும் நடிகர் விஜய் அரசியலில் நுழைய ஆயத்தமாகி வருகிறாரோ…. என்று நடக்கும் நிகழ்வுகள் யோசிக்க வைக்கின்றன. விஜய்க்கான வெற்றிடம் தமிழக அரசியலில் இருக்கிறதா, இப்போதுள்ள அரசியல் சக்திகள் முன்பு, விஜய் மாற்று சக்தியாக நிலைப்பாரா? என்ற கேள்விகளும் எழாமல் இல்லை.

எப்போது இருந்து ஒலித்தது இந்தக் குரல்? மாஸ் நடிகராக வலம் வரும் விஜய்க்கு, தமிழகம் தாண்டி அண்டை மாநிலங்களிலும் ரசிகர்கள் ஏராளம். தமிழகத்தில் அவருக்கான ரசிகர் மன்றங்களும் தாராளம். திரைத்துறையில் காலடி வைத்தபோதே, அவருக்கான ரசிகர் மன்றம் தொடங்கப்பட்டது.

இதற்கு முக்கிய காரணம் அவரது தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் தான். 2009 ம் ஆண்டு விஜய் ரசிகர் மன்றம் விஜய் மக்கள் இயக்கமாக மாற்றப்பட்டது. விஜயின் ரசிகர்களைக் கொண்டு மக்களுக்கு சேவை செய்தல், நலத் திட்டங்கள் வழங்குதல், போன்றவற்றை செய்யும் நோக்கோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அதுவரை படம் ரிலீஸ் ஆகும் போது பட்டாசு வெடித்துக் கொண்டாட்டங்களில் ஈடுபட்ட ரசிகர்கள், திடீரென மக்கள் நலத் திட்டங்களில் ஈடுபடத் தொடங்கினர். அப்போதும் இயக்கத்தின் முழுக் கட்டுப்பாடுமே எஸ்.ஏ.சந்திரசேகர் கையில் தான் இருந்தது.

2013 ம் ஆண்டு வெளியான ”தலைவா” படம்

**தீவிரமாக தனது மக்கள் இயக்கப் பணிகளை முன்னெடுத்து வரும் விஜய், அதன் உட்கட்டமைப்பையும் கிட்டத்தட்ட ஒரு அரசியல் கட்சிக்கு நிகராக கட்டமைத்துள்ளார். மகளிர் அணி, மாணவரணியில் தொடங்கி கிளைக் கழகங்கள் வரை திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டு இருக்கின்றது. இந்த நிலையில் தீவிர மக்கள் நலப் பணிகளில் விஜய் மக்கள் இயக்கத்தினர் முழுமூச்சாக ஈடுபடத் தொடங்கி இருக்கிறார்கள்.**

ஒரு திருப்புமுனை என்றே சொல்லலாம். அந்தப் படத்தில் விஜய் பேசும் வசனங்களில் அரசியல் நெடி வீசியது. குறிப்பாக ”டைம் டு லீட்” (வழிநடத்த இதுவே தருணம்) என்ற வசனம் அவருக்குள்ளும் அரசியல் ஆசை துளிர்விட்டதை உணர்த்தியது. படத்துக்கும் இது சிக்கலை ஏற்படுத்தியது.

”தலைவா” படத்துக்குப் பிறகு வெளியான ”கத்தி”, ”மெர்சல்”, ”சர்கார்” போன்ற படங்களிலும் விஜய் பேசும் வசனங்கள் அரசியலில் அவருக்கு இருந்த ஆர்வத்தை மெய்ப்பிப்பதாகவே இருந்தது.

ஜி.எஸ்.டி குறித்த விமர்சனம், மருத்துவத் துறை குறித்த விமர்சனம், இலவச டி.வி.க்களை குப்பையில் போடும் காட்சிகள் போன்றவை பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. அவரது படங்களுக்கும் சிக்கலுக்கு மேல் சிக்கல் உருவானது.

ஆனாலும், விஜய் தனது பாதையிலிருந்து பின்வாங்கவே இல்லை. ஒவ்வொரு பட விழாக்களிலும், அவர் பேசும் பேச்சு அவரது அரசியல் ஆசையை அப்பட்டமாகவே பறைசாற்றியது.

”மெர்சல்” பிரச்சினைக்குப் பின்னர் மீண்டும் தீவிரமாக தனது மக்கள் இயக்கப் பணிகளை முன்னெடுத்து வரும் விஜய், அதன் உட்கட்டமைப்பையும் கிட்டத்தட்ட ஒரு அரசியல் கட்சிக்கு நிகராக கட்டமைத்துள்ளார்.

மகளிர் அணி, மாணவரணியில் தொடங்கி கிளைக் கழகங்கள் வரை திட்டமிட்டு வடிவ



- ஆருணியா -

மைக்கப்பட்டு இருக்கின்றது. இந்த நிலையில் தீவிர மக்கள் நலப் பணிகளில் விஜய் மக்கள் இயக்கத்தினர் முழுமூச்சாக ஈடுபடத் தொடங்கி இருக்கிறார்கள்.

அரசியல் ஆயத்தப் பணிகளில் விஜய் ரகசியமாக இறங்கியிருக்கின்றார். ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகள், மூத்த அரசியல் தலைவர்களை சந்தித்து அரசியல் சம்பந்தமாக கலந்துரையாடி வருகிறார்.

குறிப்பாக திராவிடக் கட்சிகள் தமிழகத்தில் ஆட்சி அமைக்க தொடங்கியதில் இருந்து மாநிலத்தில் நிலவும் சமூக, அரசியல் நிகழ்வுகளை ஆராய்ந்து வருகிறார். தொகுதி தோறும் விஜய் மக்கள் இயக்கத்திற்கு மக்களிடையே இருக்கும் செல்வாக்கு குறித்து நிர்வாகிகளுடன் அவ்வப்போது கலந்துரையாடுகிறார். தி.மு.க, அ.தி.மு.க கட்சிகளின் ஆரம்பகட்ட வளர்ச்சி, மக்களைக் கவர அந்த இயக்கங்கள் எடுத்துக் கொண்ட கொள்கைகள், அந்த இயக்கங்களின் திட்டங்கள், அக்கட்சிகளின் தலைவர்கள், அவர்கள் கொண்டு வந்த சமூக நலத்திட்டங்கள் உள்ளிட்டவற்றை தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்.

இது எல்லாவற்றையும் தாண்டி இளம் தலைமுறையினரை குறிவைத்தே தற்போது விஜய் மக்கள் இயக்கத்தினரின் செயல்பாடுகள் அமைந்து வருகிறது. அதன் ஒரு கட்டமாக தமிழகத்தின் 234 தொகுதிகளிலும் தொகுதி வாரியாக 10, 12 - ம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவ - மாணவிகளை நடிகர் விஜய் சந்தித்து ஊக்கத்தொகை வழங்கியுள்ளார்.

எனவே, நடிகர் விஜய் 2025 ஆம் ஆண்டு முழுவதும் மக்கள் இயக்கம் மற்றும் களப்பணிகளில் கவனம் செலுத்தவுள்ளார். எனினும் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் விஜய் கவனம் செலுத்தப் போவதில்லை எனவும், 2026 ம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு பல மாநாடுகள் நடத்த உள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

விஜயின் அரசியல் பயணம் குறித்து விரைவில் அதிகாரப்பூர்வ அறிக்கை வெளியாக உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. தற்போது விஜய் தான் ஒப்பந்தமாகியுள்ள திரைப்படங்களில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். 2024 டிசம்பருக்குள் படங்களை முடித்துவிட்டு தீவிர அரசியலில் களமிறங்குவார் என்றும் கூறப்படுகின்றது.

எனவே, நடிகர் விஜய் அவர்களின் அரசியல் பிரவேசத்தையும், ”தளபதி விஜய் தமிழகத்துக்கு தலைவர் ஆவதையும்” ஈழத்தமிழர்களாகிய நாங்களும் வரவேற்கின்றோம். தமிழ் நாட்டில் திராவிடக் கட்சிகளை பின்தள்ளி தனித் தமிழ் கட்சிகளாக வருவதென்பது அவ்வளவு எளிதான காரியமுமல்ல ஏனைய, தமிழ்த் தேசியக் கருத்தியலை முன்வைத்து மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும், இயற்கை, வாழ்வியல், தற்சார்பு, பண்பாடு போன்ற விடயங்களை முன்நிலைப்படுத்தி போராடும் தமிழ்க் கட்சிகளோடு (நாம் தமிழர்) ஓரணியாக கூட்டிணைந்தால் நிச்சயம் தமிழகத்தில் தமிழர் கொடி பறக்கும் என்பதில் மாற்றுக்கருத்துகள் ஏதும் இருக்கமுடியாது.

# கரும்புலிகள் தினம் முல்லைத்தீவில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு!





முல்லைத்தீவு தேவிபுரம் பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் கரும்புலிகள் நாள் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

தாயக நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவினால் பொது இடங்களில் வைத்து கரும்புலிகள் நாளினை நினைவிற்கொள்வதற்கு பொலீஸார், புலனாய்வாளர்கள் தடைவிதித்துள்ள நிலையில் தாயக நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் ஈசன் இல்லத்தில் சிறப்பாக சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட இடத்தில் கரும்புலிகள் நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது.

முல்லை ஈசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கரும்புலிகளின் பொது திருவுருவப்படம் வைக்கப்பட்டு பொதுச்சுடரினை தாயக விடுதலைப் போரில் நான்கு பிள்ளைகளை கொடுத்து அதில் ஒரு பிள்ளை கரும்புலியாக மண்ணுக்கு வித்தான பிள்ளைகளை பெற்றெடுத்த தயாரான புஸ்பராணி ஏற்றி வைக்க தொடர்ந்து பொது திருவுருவப் படத்திற்கான சுடர்களை மூன்று மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றினர்.

தொடர்ந்து கரும்புலிகளின் பொது படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் அஞ்சலி நடைபெற்றுள்ளது.

# இலங்கையில் சர்வாதிகார ஆட்சியே நடக்கிறது: விரைவில் இலங்கை சர்வதேசத்திடம் கையேந்தும்:

# பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்!!

இன்று நாட்டில் மக்களின் விருப்பங்களுக்கு முன்னுரிமையளிக்காது சர்வாதிகார ஆட்சியே முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மடு திருத்தலத்தில் நடைபெற்ற விசேட ஆராதனையின் போது ஆண்டகை இவ வாறுதெரிவித்தார்.

நாட்டில் உற்பத்தி பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேண்டுமே தவிர, தேசிய சொத்தகளை வெளிநாடுகளுக்கு விற்று அதன் ஊடாக பணத்தப் பெற்று உணவுண்ண வேண்டும் என்பதை ஊக்குவிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த சட்டமூலத்துக்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 120 பேர் மாத்திரமே விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஏனையோர் முடியாது என்றும், சிலர் எதுவுமே தெரிவிக்காமலும் பின்வாங்கியுள்ளனர். எனவே குறித்த சட்டமூலம் பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகளின் விருப்பத்துடன் குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்படவில்லை. இந்த சட்டமூலத்தின்ஊடாக மக்களின் பணத்தை தனது விருப்பத்திற்கேற்ப பயன்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய ஆட்சியாளர்கள் தேர்தலில் போட்டியிட்டால் எவருக்கும் மக்கள் வாக்களிக்கமாட்டார்கள்.

மக்களின் விருப்பத்துக்கு முன்னுரிமையளிக்காத, ஜனநாயகம் முடக்கப்பட்ட சர்வாதிகார ஆட்சியே தற்போது காணப்படுகிறது.

நாட்டில் உற்பத்தி பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேண்டுமே தவிர, தேசிய சொத்துக்களை வெளிநாட்டுக்கு விற்று அதன் ஊடாக பணத்தைப் பெற்று உணவு உண்ண வேண்டும் என்பதை ஊக்குவிக்க கூடாது.

ஆனால், இந்த அரசாங்கம் அதனையே செய்துக் கொண்டிருக்கிறது. தற்போதைய ஆட்சியாளர்களுக்கு மாத்திரமின்றி சகலருக்கும் இது பொருந்தும். இந்த நிலைமையை மாற்றியமைக்காவிட்டால் இனிவரும் காலங்களில் முற்று முழுதாக ஏனைய நாடுகளிடம் கையேந்தும் நாடாக இலங்கை மாற்றமடைந்துவிடும் என்றார்.

# திக்கம் வடிசாலை உரிமம் தனியாருக்கு தாரைவாய்ப்பு! இது கூட்டுறவுத்துறையை முடக்கும் செயலாகும்

## கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் குற்றச்சாட்டு!!



திக்கம் வடிசாலையின் உரிமம் பனை அபிவிருத்திச் சபைத் தலைவரல் பெரும்பான்மையின த்தைச் சேர்ந்த தனிநபரொருவருக்கு வழங்கப் பட்டுள்ளது.

இது கூட்டுறவுத்துறையை முடக்கும் செயலாகும். இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:

பனை மரத்தைப் பற்றியோ அதன் பயன்பாடு பற்றியோ அறியாத சிங்கள மொழிபேசும் தென் பகுதியைச் சார்ந்த ஒருவர் பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தவறானது, வடக்கு - கிழக்கில் பனைவளத்துடன் ஈடுபாடு கொண்ட இளையோர் தவிர்க்கப்பட்டு பனை அபிவிருத்திச் சபைக்கு சிங்கள இளையோரை உள்வாங்கியிருப்பது சபை கீழ் நோக்கிச் செல்ல வழிவகுக்கும்.

அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகம் யாழ்ப்பாணத்தில் இருந்த போதிலும் கூட, பல இலட்ச ரூபா வாடகையில் கொழும்பில் இன்னொரு தலைமைச் சங்கம் இயங்கிவருகிறது.

திக்கம் வடிச்சாலைக்கான உரிமம், பனம் சாராயத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம், அவற்றைக் களஞ்சியப்படுத்துவதற்கும் விற்பதற்குமான உரிமம் ஆகியவை பனை அபிவிருத்திச் சபையின் தலைவரால் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த தனிநபரொருவருக்கு அளித்துள்ளதாக அறிய முடிகிறது.

பனை வளச் சங்கங்கள், சமாசங்கள், அதன் கூட்டுறவு நடவடிக்கைகள் அனைத்தையும் முடக்கி சகல வருமானங்களையும் ஒரு தனிநபருக்கு அளிக்க முற்பட்டமையானது ஒட்டுமொத்த பனை அபிவிருத்தி முயற்சியையும் சீர்குலைக்கும் என்று தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மாணவர்களின் எதிர்காலம் கருதி ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து தரப்பினருக்கும் நன்றி!! யாழ். மாவட்டச் செயலர் வரவேற்பு



மாணவர்களின் சிறந்த எதிர்காலத்துக்கென கொண்டுவரப்பட்ட வெள்ளி, ஞாயிறு தினங்களின் கற்றல் செயல்பாட்டை தடை செய்யும் நடைமுறையை பின்பற்றிய அனைவருக்கும் நன்றியை கூறிக்கொள்கிறேன் என யாழ். மாவட்டச் செயலர் ஆ.சிவபால சுந்தரம் தெரிவித்துள்ளார்.

தனியார் கல்வி நிறுவனம், பிரத்தியேக கல்வி வகுப்புக்கள் வாரத்தில் ஏழு நாட்களும் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் பிள்ளைகள் சமூகத்தில் சாதக, பாதக நிலைமைகளை எதிர் நோக்க நேரிடுகிறது.

அதனால் பிள்ளைகளுக்கு ஏற்படும் மன அழுத்தங்களை குறைப்பதற்கும் பெற்றோருடன் பிள்ளைகளுக்கான பிணைப்பை ஏற்படுத்தி அதிக நேரத்தை செலவிடவும் தனியார் வகுப்புக்கள் வெள்ளி, ஞாயிறு தினங்களில் நடைபெறுவதை நிறுத்தும் தீர்மானத்தை கொண்டு வந்தேன்.

இந்த தீர்மானத்தை ஏற்று நடைமுறைப்படுத்தி ஒத்துழைப்பு நல்கிய அனைத்து தனியார் கல்வி நிறுவன நிர்வாகம், பிரத்தியேக வகுப்புக்களை நடத்துபவர்கள், பெற்றோர் என அனைவருக்கும் நன்றியை தெரிவிக்கின்றேன்.

இந்த நடைமுறையைத் தொடர்ந்தும் பின்பற்றி அனைத்து தரப்பினரும் மாணவர்களின் சிறந்த எதிர்காலத்துக்கு பாலமாக அமைய வேண்டும் - என்றார்.

# சிவபூமி மனவிருத்தி பாடசாலை ஆண்டு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் !



கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலையின் 20 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சிறப்பு மலர் வெளியிடப்பட்டதுடன் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திரு முருகன் தலைமையில் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது.

கல்லூரி மண்டபத்தில் ஆண்டு நிறைவு விழா சிறப்பாக நடைபெற்றது.

ஆறு. திருமுருகனின் வாழ்க்கை வரலாற்றை ரிஷி தொண்டு நாதன் சிறு தொகுப்பாக எழுதிய கையேட்டு நூலும் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தனராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறிசற்குணராசா, சிறப்பு விருந்தனராக வைத்திய கலாநிதி மனோமோகன் தம்பதியினர் கலந்து கொண்டனர்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொன்.பாலசுந்தரப்பிள்ளை உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அமெரிக்கா, ரஷ்யா, சீனாவை விட இந்தியாவின் செல்வாக்கு மத்திய கிழக்கில் அதிகரிப்பு!

## அமெரிக்க இதழ் புகழாரம்!!



அமெரிக்க தலைநகர் வோஷிங்டனை தலைமையிடமாக கொண்டு பாரின் பாலிசி இதழ் செயற்படுகிறது. இந்த இதழின் கட்டுரையாளர் ஸ்டீவன் குரூக், மத்திய கிழக்கில் இந்தியாவின் செயல்பாடுகள் குறித்த சிறப்பு கட்டுரையை எழுதியுள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது: மத்திய கிழக்கு நாடுகளில் இந்தியாவின் செயல்பாடுகள் கடந்த 10 ஆண்டுகளில் கணிசமாக அதிகரித்திருக்கிறது. ஒரு காலத்தில் மத்திய கிழக்கில் அமெரிக்கா கோலோச்சி வந்தது. ரஷ்யா, சீனாவால் கூட மத்திய கிழக்கில் ஆழமாக கால் ஊன்ற வாய்ப்பில்லை.

அமெரிக்கா, ரஷ்யா, சீனாவை பின்னுக்குத் தள்ளி இப்போது இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது.

ஐக்கிய அரபு அமீரகமும், சவுதி அரேபியாவும் இந்தியாவுடன் நட்புறவைப் பேணுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றன.

இந்த இரு நாடுகளும் ஒரு காலத்தில் பாகிஸ்தானோடு நெருக்கம் காட்டி வந்தன. தீவிரவாதத்தை கட்டுப்படுத்துவது, பொருளாதார உறவை மேம்படுத்துவது ஆகியவற்றில் ஐக்கிய அரபு அமீரகமும் சவுதி அரேபியாவும் இந்தியாவோடு இணைந்து செயல்பட்டு வருகின்றன. இதற்கிடையில் இந்தியா, இஸ்ரேல் இடையிலான பாதுகாப்பு, தொழில் நுட்ப உறவும் செழித்தோங்கி வளர்ந்து வருகிறது. கடந்த 2017 ஆம் ஆண்டில் பிரதமர் மோடி இஸ்ரேல் நாட்டுக்கு வரலாற்று சிறப்பு மிக்க பயணத்தை மேற்கொண்டார். இதைத் தொடர்ந்து இஸ்ரேலில் முதலீடு செய்ய இந்திய தொழிலதிபர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மத்திய கிழக்கில் அமைந்துள்ள எகிப்து, கடல் பிராந்திய வர்த்தகத்தில் முக்கிய இடம் பிடித்திருக்கிறது. எகிப்தின் சூயஸ் கால்வாய் வழியாக ஐரோப்பிய நாடுகள், ஆபிரிக்க நாடுகளுக்கு சீனாவின் சரக்கு கப்பல்கள் செல்கின்றன.

இந்த சூழலில் சீனாவுக்கு போட்டியாக சூயஸ் கால்வாய் பகுதியில் இந்தியாவும் ஆழமாக கால் பதித்து வருகிறது. இதில் இந்தியாவுக்கு பக்க பலமாக எகிப்து செயல்படுகிறது.

பிரதமர் மோடி அண்மையில் எகிப்தில் பயணம் மேற்கொண்டார்.

எகிப்து அதிபர் அப்தெல் ஃபத்தா அல் சிசி ஒராண்டில் 3 முறை இந்திய பயணம் மேற்கொண்டதால் இரு நாட்டு உறவு வலுவடைந்துள்ளது. சர்வதேச அரங்கில் சீனாவின் ஆதிக்கத்தால் கட்டுப்படுத்த இந்தியாவுடன் அமெரிக்கா கை கோத்து செயல்படுகிறது. இந்த சூழலில் மத்திய கிழக்கில் இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்து வருவது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இவ்வாறு கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை மீள அழைக்கும் பின்னணியில் "காகம்"

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபையில் குற்றச்சாட்டு!!

பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் உறுப்பினர் ஜயந்த கெட்டகொட, உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்களை மீள அழைப்பது தொடர்பான இரண்டு தனிநபர் சட்ட மூலங்களை முன்வைத்தபோது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

உள்ளூராட்சிச் சபை திருத்தச் சட்டமூலத்தையும் கெட்ட கொட சமர்ப்பித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இது தொடர்பில் தெரிவிக்கையில் - உள்ளூராட்சி தேர்தலை நடத்த வேண்டும் ஆனால் அரசு பணம் இல்லை எனக் கூறி தள்ளி வைத்தது. இப்போது கெட்டகொடவின் கோரிக்கையின் பேரில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்துள்ள நிலையில் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தை நாட உள்ளோம்.

காகம் முழந்து விட்டது. இந்த நாட்டில் ஜனநாயகத்தை அழிக்க காக்கையின் பேய்கள் செயல்படுகின்றன - என்றார்.

# குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனாருக்குப் பொங்கல்!



முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலை, ஆதிசிவன் ஐயனாருக்கு இம்மாதம் 14 ஆம் திகதி பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளவுள்ளதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இற்கமைய பொங்கல் வழிபாடுகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் ரவிகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - எங்கள் குறுந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் தொடர்பில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும், ஏற்கனவே நீதிமன்றக் கட்டளைப்படி சைவ வழிபாடுகள் மேற்கொள்ளலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் நாங்கள் எல்லோரும் இம்மாதம் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை, காலை 09 மணிக்கு குறுந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் இருந்த இடத்தில் ஒரு பொங்கல் வழிபாட்டை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

அனைவரையும் அந்த பொங்கல் வழிபாட்டில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.




**அன்பான வாசகர்களுக்கு..!**

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.
அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

*No. 27, Kannathiddy Road, Jaffna. | Tel : 021 222 7557*
*E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339*



# புதைகுழிகளில் தோண்டி எடுக்கப்படும் போர்க்குற்ற உண்மைகள்!

## மறைக்கப்பட்ட உண்மைகளுக்கு மௌன சாட்சிகளாகும் எலும்புகள்!!

சிறிலங்காவில் இடம்பெற்ற மனித குலத்திற்கு எதிரான போர் குற்றமும் சிறிலங்கா அரசாங்கத்தினால் போர் நெறிமுறைகளை மீறி மேற்கொள்ளப்பட்ட யுத்தமும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களின் வடுக்களும் மெல்ல மெல்ல திட்டமிட்ட அரச கட்டமைப்பினால் அழிக்கப்பட்டு வந்தாலும் அவ்வப்போது தோன்றும் மனித புதைகுழிகளும், அரசாங்கத்தின் ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களும், சர்வதேச அழுத்தங்களும், தமிழ் சமூகத்தின் எதிர்ப்புக்களும் நாட்டில் இன்னமும் இனரீதியான ,மத ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வு முன்னோக்கி கொண்டு செல்லப்படவில்லை என்பதை எடுத்துகாட்டுகின்றது.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், போர்க்குற்ற விசாரணைகள், காணாமல் போனோர் தொடர்பான தீர்வு தொடர்பில் சர்வதேச ரீதியாக சிறிலங்கா சமாளிப்புகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் கடந்த வாரம் முல்லைத்தீவு பகுதியில் பெண் போராளிகள் உட்பட பலர் கொன்று பைகளில் அடைத்து புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் புதைகுழி ஒன்று இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த பகுதி ஒன்றில் அடையாளம் காணப்பட்டுள்ளமை பல தரப்பட்ட கேள்விகளை எழுப்பியுள்ளது.

2009 ஆம் ஆண்டு இடம் பெற்ற இறுதி யுத்தத்தின் போது தமிழர் தாயக பகுதிகளில் சுமார் நாற்பதாயிரம் தொடக்கம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தின் பல்வேறு விதமான கொடூர தாக்குதலாலும், செல் வீச்சுக்களாலும் கொல்லப்பட்டதாக இறுதி யுத்ததின் போது உயிர் பிழைத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

### காணாமல் ஆக்கப்பட்டவர்கள்

அதே நேரம் இறுதி யுத்ததிற்கு முன்பும், யுத்த நேரத்திலும், யுத்தம் நிறைவுற்ற பின்னரும் சிறிலங்காவின் முப்படையினராலும், வெள்ளை வான்களின் மூலமாகவும், தமிழர் தாயகப்பகுதிகளில் இலட்சக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதாகவும் இன்னும் பலர் விசாரணை என்ற பெயரில் அழைத்து செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதாகவும் அதே நேரம் யுத்தம் நிறைவுற்ற சமயம் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த போராளிகள் நூற்றுக்கணக்கானோர் பல்வேறு பகுதிகளில் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்து பின்னர் அவர்களும் காணாமல் ஆக்கப்பட்டதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளை தேடும் சங்க உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சுமார் 15000 பேர் வரையில் சிறிலங்காவின் இராணுவம், கடற்படை, அரசபுலனாய்வாளர்கள், காவல்துறையினரால் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

அதே நேரம் சிறிலங்காவின் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்திடம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக 2022 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட தகவலின் பிரகாரம் தமிழ், சிங்கள, முஸ்லீம்கள் உள்ளடங்கலாக இதுவரை சிறிலங்காவில் 14988 நபர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளமைக்கான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தகவல் வழங்கியுள்ளனர்.

குறிப்பாக தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சாலும், ஜனாதிபதி செயலகத்தாலும் பெறப்பட்ட கோவைகளின் பிரகாரம் 14700 பேர் காணமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும், காணாமல் ஆக்கப்பட்டோருக்காக பிராந்திய ரீதியில் அமைக்கப்பட்ட அலுவலகங்கள் ஊடாக 1557 முறைப்பாடுகளும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தலைமை அலுவலகத்தால்1375 முறைப்பாடுகளும் இவற்றில் நடவடிக்கையின் போது காணமற்போனோர், ஆணை கிடைக்காதவை, இரட்டை பிரதிகள் தவிர்த்து ஒட்டு மொத்தமாக 14988 பேர் காணாமல் போய் உள்ளதாக காணாமல் போனோருக்கான அலுவலகம் தகவல் வழங்கியுள்ளது.

### வடக்கிலிருந்தே அதிக முறைப்பாடுகள்

அதிலும் அவ் அலுவலகம் சுட்டிக் காட்டியுள்ளதன் பிரகாரம் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் வழங்கப்பட்ட முறைபாடுகளில் 60.68 வீதமானவை வடக்கில் இருந்தே கிடைக்கப்பெற்றுள்ளதாக அவ் அலுவலகம் தெரிவிக்கின்றது.

**குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் 488 முறைப்பாடுகளும் அவற்றில் 2000-2021 வரையான காலப்பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டமைக்கான 361 முறைப்பாடுகளும்,**

**கிளிநொச்சி மாவட்டத்தில் 1010 முறைப்பாடுகளும் அவற்றில் 2000-2021 வரையான காலப்பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டமைக்கான 948 முறைப்பாடுகளும்,**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 528 முறைப்பாடுகளும் அவற்றில் 2000-2021 வரையான காலப்பகுதிகளில் காணமல் ஆக்கப்பட்டமைக்கான 461 முறைப்பாடுகளும்,**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் 2106 முறைப்பாடுகளும் அவற்றில் 2000-2021 வரையான காலப்பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டமைக்கான 1485 முறைப்பாடுகளும்**

**வவுனியா மாவட்டத்தில் 568 முறைப்பாடுகளும் அவற்றில் 2000-2021 வரையான காலப்பகுதிகளில் காணமல் ஆக்கப்பட்டமைக்கான 401 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.**

அதே நேரம் காலகட்டத்தின் பிரகாரம்

**சிறிலங்காவில் 2001-2010 ஆண்டு காலப்பகுதியில் 5605 நபர்கள் காணாமல் போயுள்ளதுடன்,**

**1981-1990 வரையான காலப்பகுதியில் 5255 நபர்களும்,**

**1991-2000 வரையான காலப்பகுதியில் 3440 நபர்களும்,**

காணாமல் போயுள்ளதற்கான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவ் அலுவலகம் தகவல் வழங்கியுள்ளது.

சிறிலங்கா அரசின் மீதும் அதே நேரம் காணாமல் போனோர் அலுவலகம் மீதும் நம்பிக்கை அற்ற நிலையில் தமிழர் தாயக பகுதிகளில் பலர் இவ் அலுவலகத்தில் எவ்விதமான பதிவுகளையும் முறைப்பாடுகளையும் மேற்கொள்ளாமல் உள்ள நிலையிலேயே 60 வீதமான முறைப்பாடுகள் வடக்கில் இருந்து மாத்திரம் மேற்கொள்ளப்பட்டமை கருத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

### மனித புதைகுழிகள்

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட, சரணடைந்த தங்கள் பிள்ளைகளை தேடும் ஆயிரக்கணக்கான தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் எங்காவது உயிருடன் இருந்து விடமாட்டார்களா என்ற ஏக்கத்தில் மரணிப்பதற்கு முன் அவர்களைப் பார்த்து விடமாட்டோமா என்ற ஆசையில் 14 ஆண்டுகள் கடந்து வீதிகளிலும், அரச அலுவலகங்களிலும், மனித உரிமை ஆணைக்குழுக்களிலும், விசாரணைக்குழுக்களுக்கு முன்பாகவும் சாட்சியமளிக்காத நாட்களே இல்லை.

ஆனால் அவ்வாறு நம்பிக்கையுடன் பிள்ளைகளை தேடும் தாய்மார்களின் மனதில் தங்கள் பிள்ளைகள் உயிருடன் உள்ளார்களா இல்லையா என்ற கவலைகள் அண்மைக்காலமாக சூழ்ந்து கொள்ளத்தொடங்கியுள்ளது.

அதற்கு காரணம் வடக்கு கிழக்கு தமிழர் தாயகப்பகுதிகளில் அவ்வப்போது தோன்றும் மனித புதைகுழிகளே! முன்னதாகவே மன்னார் மாவட்டத்தில் திருகேதீஸ்வரம் மற்றும் மன்னார் சதோச புதைகுழிகளில் கம்பிகள் சுற்றப்பட்டும் அதே நேரம் குழந்தைகள் உட்பட 250 க்கும் அதிகமான எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டு அதிர்சியை ஏற்படுத்தியிருந்தது அது சிறிலங்கா அரசாங்கத்தினால் காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய உறவுகளாக இருக்கலாம் என்ற அச்சத்திலும் சந்தேகத்திலும் மன்னார் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மன்னார் நீதவான் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து நடத்தி வருகின்றனர்.

அவ்வழக்கே பல ஆண்டுகள் நடத்தப்பட்டு முடிவுறுத்தப்படாத நிலையில் தொடர்ச்சியாக விசாரணைகள் இடம் பெற்று வருகின்ற நிலையில் கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதியில் நீர் வடிகால் அமைப்பு சபையினால் நீர் விநியோகத்திற்கு என தோண்டப்பட்ட குழி ஒன்றில் நான்கிற்கு மேற்பட்ட பெண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது.

### முல்லைத்தீவில் மனித எச்சங்கள்

முல்லைத்தீவு நெடுங்கேணி பிரதான வீதியில் 26 மைல் எல்லையில் கொக்குத்தொடுவாய் மத்தி கிராம சேவகர் பிரிவில் கடந்த வியாழக்கிழமை(29) நீர்வழங்கல் மேற்கொள்வதற்காக ஒப்பந்த நிறுவனம் ஒன்றால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது வீதியில் இருந்து 6 மீற்றர் தொலைவில் ஒரு மீற்றர் அகலம் கொண்ட கிடங்கில் 2-6 அடி ஆழத்தில் மனித எச்சங்கள் வெளிப்பட்டுள்ளது.



இதனைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை(30) முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி வு.சரவணராஜ தலைமையிலான குழு மதியம் மூன்று மணியளவில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு அங்கு இராணுவ சீருடையை ஒத்த உடைகளும் எழும்புத் துண்டுகளும் பெண்கள் அணியும் உள்ளாடைகளும் வெளியில் காணப்பட்டதாகவும் இதற்கான அகழ்வுப் பணியை மேற்கொள்ள கொக்கிளாய் காவல் துறையினர் வருகின்ற வியாழக்கிழமை(6) உரிய தரப்பு நிறுவனங்களுக்கு அழைப்பை விடுத்து அகழ்வுப் பணியை மேற்கொள்ளு

மிகுதி அடுத்த பக்கம் பார்க்க...

# சர்வதேச கண்காணிப்பின் கீழ் தொடர் நடவடிக்கைகள் இல்லை எனில்
# உண்மை மீண்டும் உறங்கிவிடும்?



மாறு கட்டளை பிறப்பித்திருந்தார்.
குறிப்பாக அப்புதைகுழிகளில் பெண்களின் உள்ளாடைகளும் மீட்கப்பட்டுள்ளதுடன் விடுதலைப் புலி உறுப்பினர்கள் சிலர் வட்டுவாகல் பகுதியில் சரணடைந்த சமயம் அணிந்ததற்கு ஒப்பான சீருடையுடன் கூடிய எலும்புகள் மீட்கப்பட்டுள்ளது. அதே நேரம் குழியின் ஓரத்தில் பொலித்தீன் பைகளால் கட்டப்பட்ட விதாமாக உள்ள சடலங்கள் என சந்தேகிக்க கூடிய விதமாக உள்ள சடலங்களும் காணப்பட்டுள்ளது.
இவ்வாறு மீட்கப்பட்ட ஆடைகள் மற்றும் எலும்புகள் தமிழர் தாயகப்பகுதிகளில் பல்வேறு விதமான சந்தேகத்தை எழுப்பியுள்ளது. குறிப்பாக சரணடைந்த பெண் போராளிகள் சித்திர வதைகளுக்கும் துஸ்பிரயோகத்திற்கும் உள்ளாக்கப்பட்டு கொடூரமான முறையில் கொன்று புதைக்கப்பட்டுள்ளார்களா, அல்லது சரணடைந்த புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்களா, அல்லது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தேடும் தங்களின் உறவினர்களின் சடலங்களா இவை போன்ற பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

### சிறிலங்கா அரசாங்கம் ஒழுங்கான விசாரணைகள் மேற்கொள்வதில்லை

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பாக சிறிலங்காவில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழிகள்



தொடர்பில் சிறிலங்கா அரசாங்கம் ஒழுங்கான முறையில் விசாரணைகளை மேற்கொள்வதில்லை என்பது தொடர்பில் நான்கு அமைப்புக்கள் இணைந்து குற்றசாட்டு ஒன்றை முன்வைத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அவ் அறிக்கை வெளிவந்து ஒரு வாரம் கூட பூர்த்தியாக நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
குறித்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடமான கொக்கிளாய் கொக்குத்தொடுவாய் பகுதியைச் சேர்ந்த தாங்கள் 1984 ஆண்டு இடம் பெற்ற யுத்தம் காரணமாக அப்பகுதியில் இருந்து வெளியேறியதாகவும் 1984 ஆண்டுக்கு பின்னர் அப்பகுதி முழுவதும் இராணுவத்தின் சூனியப்பிரதேசமாகவே காணப்பட்டதாகவும் அங்கு பாரிய இராணுவ முகாம் மற்றும் இராணுவத்தின் மருத்துவ முகாம் காணப்பட்டதாகவும் பொது மக்கள் யாரும் அப்பகுதிக்குள் நுழைய முடியாத நிலை காணப்பட்டதாகவும் அப்பகுதியில் வசிக்கும் சுந்தரம்பிள்ளை சிவமணி தெரிவிக்கின்றார்.
2009 யுத்தம் நிறைவுற்ற பின்னரும் இப்பகுதி முழுவதும் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் காணப்பட்டதுடன் யுத்தம் நிறைவடைந்து 2011-2013 வரையான காலப்பகுதியிலேயே அப் பகுதியில் மக்கள் மீள்குடியேற அனுமதி வழங்கப்பட்டதாகவும் அப்பகுதியில் மீள்குடியேற்றத்துக்காக தனது மகன் வீடு ஒன்று அமைப்பதற்காக அத்திவாரம் வெட்டிய சமயத்தில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் உடையுடன் ஒரு சடலம் காணப்பட்டதாக அவர் மேலும் தெரிவிக்கின்றார்.
அத்துடன் இப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் தனது இரு சகோதரர்கள் தேங்காய் ஆய்வதற்காக நாயாறு பகுதியில் இருந்து தங்கள் காணிக்குள் சென்ற சமயம் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு கடுமையாக சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டு கிணற்றுக்குள் வீசப்பட்டதாகவும் பின்னர் கிணற்றில் இருந்து தனது இரு சகோதரர்களையும் சடலமாக மீட்டதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.
இவ்வாறு அரச படையினரின் வசம் இருந்த பகுதி ஒன்றில் ஆடைகள் உக்காத நிலையில் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளமை ஒட்டுமொத்த சந்தேகத்தையும் சிறிலங்கா இராணுவத்தின் மீது திருப்பியுள்ளது இருப்பினும் நீதிமன்ற நடவடிக்கை ஊடாகவே குற்றம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்க முடியும் என காவல்துறையினர் தெரிவித்துள்ளதாக வடமாகாண முன்னாள் உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.
ஆனாலும் சிறிலங்கா அரசாங்கத்தின் மனித புதைகுழி தொடர்பான விசாரணைகள் போலித்தனமானவை என்பதுடன் காலத்தை வீண் விரயம் செய்து குற்றம் செய்தவர்களை சட்டத்தில் இருந்து காப்பாற்றுவதற்கான வேலையை மேற்கொள்வதற்கான நடவடி க்கை என காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்ற னர்.
அதே நேரம் நான்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களினால் கடந்த வாரம் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் சிறிலங்காவில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி தொடர்பிலும் அரசாங்கத்தின் செயற்பாடு தொடர்பிலும் பல்வேறு விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறிப்பாக சிறிலங்காவில் பல்வேறு காலப்பகுதிகளில் நடைபெற்ற மோதல்களின் போது பாரிய மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பல்லாயிரக்கணக்கான சடலங்கள்

அவ்வாறு அடையாளம் காணப்பட்ட புதைகுழிகளில் இன்னும் பல்லாயிரக்கணக்கான சடலங்கள் புதையுண்டு உள்ளதாகவும் , இந்தப் புதைகுழி தொடர்பான விசாரணை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக்குழுக்கள் தமது கடமையை சரிவர முன்னெடுக்கவில்லை எனவும் அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
இதனால் உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன எனவும் நீதிபதிகளும், தடயவியல் நிபுணர்களும், திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப்படுவதாகவும் நீதிமன்ற உத்தரவை காவல்துறை தாமதப்படுத்தியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சார்பாக வாதிடும் வழக்கறிஞர்கள் புதைகுழி உள்ள இடங்களுக்கு போவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது உயிருடன் உள்ள சாட்சிகளை கண்டறிவதற்கு எந்த ஒரு தரவுகளும் சேகரிக்கப்படவில்லை என அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அதே நேரம் யாரேனும் குற்றவாளி என நிருபிக்கப்பட்டிருந்த வழக்குகளிலும் அந்த குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அவ் அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

> **"2009 ஆம் ஆண்டு இடம் பெற்ற இறுதி யுத்தத்தின் போது தமிழர் தாயக பகுதிகளில் சுமார் நாற்பதாயிரம் தொடக்கம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தின் பல்வேறு விதமான கொடூர தாக்குதலாலும், செல் வீச்சுக்களாலும் கொல்லப்பட்டதாக இறுதி யுத்தத்தின் போது உயிர் பிழைத்தவர்கள் தெரிவிக்கின்றனர்."**

சர்வதேசத்திற்கு முன் தாங்கள் விசாரணைகளை திறம்பட செய்வதாக காண்பித்து வழக்கு விசாரணைகளை இழுத்தடிப்பதும் வழக்குகளை இழுத்தடிப்பதாகவுமே பல புதைகுழி வழக்குகள் காணப்படுவதாக புதைகுழி வழக்குகளில் அரசாங்கம் தான் என்ன நினைக்கின்றதோ அதையே செய்கின்றது என காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சங்க மன்னார் மாவட்ட தலைவி மனுவெல் உதயசந்திரா தெரிவிக்கின்றார்.
மேலும் இராணுவம் இவ்வாறு தமிழர்களை கொன்று புதைத்த இடங்களையே இராணுவ முகாம்களாக்கி வைத்துள்ளதாகவும் அவ் காணிகளை விடுவித்தால் இவ்வாறு நூற்றுக் கணக்கான புதைகுழிகள் வெளிப்படலாம் என்ற அச்சத்திலேயே அவ் முகாம்களை இராணுவம் கைவிடாமல் இருப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.
குறிப்பாக இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த இப்பகுதியில் இதே போன்று உள்ள வேறு புதைகுழிகளும் கண்டுபிடிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே மகாவலி வலயம், பௌத்த விகாரைகள், சிங்கள குடியேற்றங்களை அமைத்து புதைகுழிகளை மறைக்கின்றது என குற்றம் சுமத்துகின்றார்.
கடந்த 2018 மன்னார் சதோச மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் வழக்கில் குற்றம் இழைத்தவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதுடன் சந்தேக நபர்களும் அடையாளப்படுத்தப்படவில்லை. மேலும் மிகுதி உள்ள எலும்புகளை அகழ்வதற்கான நடவடிக்கையும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

### ஜனநாயகம் புதைக்கப்பட்டமை

அதே நேரம் மன்னார் திருகேதீஸ்வரம் இராணுவ முகாமிற்கு அருகில் மீட்கப்பட்ட 141இற்கு அதிகமான எலும்புக்கூடுகளும் அவை கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பிலான விசாரணையும் 10 வருடங்களுக்கு மேலாக இடம் பெற்று வருகின்ற போதிலும், மீட்கப்பட்ட எலும்புகள் இதுவரை பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.
இதே போன்று யாழ்ப்பாணம் மிருசுவில் புதைகுழி, செம்மணி புதைகுழி, மாத்தளை புதைகுழி என 20 இற்கும் மேற்பட்ட புதைகுழிகளில் சிறிலங்கா அரசாங்கத்தின் இன அழிப்புக்கான ஆதாரங்கள் புதைக்கப்பட்டாலும் அவற்றை உறுதி செய்வதற்கான இழுத்தடிப்புக்கள் மூலம் தன்னை பாதுகாத்து கொள்கின்றது இந்த அரசாங்கம்.
நாட்டில் ஒரு நபர் வாழ்வதற்கான உரிமை சிறிலங்காவில் மறுக்கப்பட்டு சர்வதேச யுத்த சட்டங்கள் மீறப்பட்டு ஜனநாயகம் புதைக்கப்பட்ட தன் நேரடி சாட்சியமே இந்த புதைகுழிகள்.
இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட இன்னும் கண்டு பிடிக்கப்படவுள்ள மனித புதை குழிகள் சிறிலங்காவில் தசாப்தங்கள் கடந்தும் இடம்பெறும் இன அழிப்பு மற்றும் ஜனநாயக கொலைகளின் சாட்சியங்களே.
இந்த புதைகுழிகள் தொடர்பில் எப்போது நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றதோ இந்த புதைகுழிகளில் கொடூரமாக கொல்லப்பட்டவர்களுக்கு நீதி எப்போது கிடைக்கின்றதோ அன்று தான் இந்த நாடு சுகந்திர நாடு என்ற வழி நோக்கி நடக்கும் அதுவரை மதவாத, இனவாத கொலையாளியாகவே இந்த நாடு காணப்படும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

# புதுடெல்லி பேச்சுவார்த்தைகளில் 13வது திருத்தம்!

# ஜனாதிபதி ரணிலின் நிலைப்பாடு என்ன?

**இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயம் எதிர்வரும் 21ம் திகதிக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் நிலையில், இந்தியப் பிரதமர் மோடிக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இடம் பெறவுள்ள பேச்சுவார்த்தைகளில், இலங்கை அரசமைப்பின் 13வது திருத்தமே மிக முக்கியமான விடயமாக முன்னணியில் இருந்து கொண்டிருக்கிறது.**

இந்தியாவும் இலங்கையும் சம்பந்தப்பட்ட பல்வேறு அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் பலவும், பேச்சுவார்த்தைகளில் ஆராயப்படவிருக்கும் நிலைமையில், இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய விவகாரம் முக்கிய இடத்தைப் பிடிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், கொழும்பு துறைமுகத்திலும், அம்பாந்தோட்டை துறைமுகத்திலும் சீனா வலுவாக காலூன்றி நிற்கும் நிலையில், இந்தியாவின் பாதுகாப்புக்கு விடுக்கப்பட்டிருக்கும் சவால்களும், முக்கியத்துவம் வாய்ந்த மற்றுமொரு விடயமாக விவாதிக்கப்படும் என்றே அறியப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையில், மேலும் இந்திய உதவிகளை பெற்றுக் கொள்வது தொடர்பிலும், இருதரப்பு வர்த்தக நடவடிக்கைகள் பற்றியும், பரஸ்பர பொருளாதார ஒத்துழைப்புக்கள் சம்பந்தமாகவும், அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட உள்ள அதே நேரத்தில், சீனா சம்பந்தப்பட்ட விவகாரத்தை, வழக்கம் போலவே, இலங்கைத் தரப்பு, 'இந்தியா மிக அருகில் இருக்கும் அயலவன் - சீனாவோ வெகு தொலை தூரத்தில் உள்ள சிநேகிதன்' என்ற, வார்த்தை ஜாலத்திற்குள் நின்று கொண்டு, இந்தியாவின் நிலைப்பாடு கடுமையாகி இறுகி விடாமல், ஒரு மாதிரி சமாளிக்கப்படுவதிலேயே குறியாக இருக்கும் என்றே கூற முடியும்.

## இலங்கையின் சீனக் காதலால்

## இந்தியாவின் தெற்கு எல்லையில் நெருக்கடி!



அதேவேளையில், தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கும் இலங்கையின் இனப்பிரச்சினையில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக வந்த 13வது அரசியல் சாசன திருத்தத்தை, இனிமேலும் சட்டப் புத்தகத்திற்குள்ளே பூட்டி வைத்துக் கொண்டிருக்காமல், அதனை முற்றுமுழுதாக செயற்படுத்துவது, மிக அவசியமானது என இந்தியத் தரப்பு உறுதியாக வலியுறுத்தும் என்றே அரசியல் அவதானிகள் பலரும் கருதுகின்றார்கள்.

இன்றைய நிலைமையில், இலங்கை தமிழ்த் தேசியத் தரப்புக்கள், இணைப்பாட்சி எனப்படும் சமஷ்டி ஆட்சி முறையே பிரச்சினைக்கான ஒரே தீர்வு என, பல சந்தர்ப்பங்களில் பிரிந்து நின்றும், ஏனைய சில சந்தர்ப்பங்களில் ஒன்றுபட்டு ஒரே குரலிலும் பேசி வந்திருந்தாலும், 'இப்போது அதனைப் பற்றி சிந்திப்பது பொருத்தமானது அல்ல' என்றும், 'உடனடியான சாத்தியம், 13வது திருத்தத்தின் முழுமையான அமுலாக்கலே' என்றும், இந்தியா மீண்டும் மீண்டும் கூறி வந்திருக்கும் சூழ்நிலையில், அந்த அரசியல் வழித்தடத்தில் நின்று கொண்டு இந்தியத் தரப்பு புதுடெல்லி பேச்சுவார்த்தைகளில் தனது நிலைப்பாட்டை உறுதியாக வலியுறுத்தும் என்றும் சொல்லப்படுகின்றது.

அத்துடன், இலங்கையில் சீனாவின் அச்சுறுத்தும் பிரசன்னம் தொடர்பில், அதனை மட்டுப்படுத்துவதும், கட்டுப்படுத்துவதும் மாத்திரமின்றி, எந்த நேரத்திலும் அதற்கு ஈடு கொடுத்து நின்று பிடிக்கும் கட்டாயத்திலும், எந்தவொரு சமரசத்துக்கும் இடமில்லை என்பதையும் இலங்கை தரப்புக்கு மீண்டும் ஒருமுறை நாகரீகமாகவும் நாசூக்காகவும் ராஜதந்திர மொழியில் இந்தியா எடுத்துரைக்கத் தவறாது என்பதும் பேசப்படுகின்றது.

இந்திய - இலங்கை உறவில் இப்பொழுது மிக ஆரோக்கியமான சூழ்நிலை நிலவிக் கொண்டிருந்தாலும், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்கள், 'றியல் பொலிற்றிக்' என்று ஆங்கில மொழியில் குறிப்பிடப்படும் யதார்த்த அரசியலை முன்னிறுத்தியே அணுகப்பட்டாக வேண்டும் என்பதை, சர்வதேச மட்டத்தில், சிறப்பாக, சீனா தொடர்பில் மிகப் பாரிய விலையொன்றை, இந்தியாவின் முதற் பிரதமர் ஜவகர்லால் நேருவின் காலத்தில், 1962இல், கொடுத்தே கற்றுக் கொண்ட கசப்பான அனுபவப் பின்னணியில், தனது பிரகடனப்படுத்தப்படாத முதல் எதிரியாக அன்று முதல் நிலைத்து நிற்கும் சீனா, இன்று தனது எல்லைக்கு மிக அருகில், கூப்பிடும் தூரத்தில், இலங்கைத் தீவில் நிலைகொண்டிருப்பதை எப்போதும் சிந்தையில் சுமந்தபடியே செயற்பட்டாக வேண்டிய நிர்ப்பந்தம் மிக்க சோதனைச் சூழ்நிலையில், இந்த நிலைமைக்கு அடிப்படைக் காரணம், இலங்கையின் சீனக் காதல் மட்டுமன்றி, இந்தியா தொடர்பான வரலாற்று ரீதியான அச்சமும் சந்தேகமும் என்ற உண்மையின் பின்னணியிலேயே, இலங்கைக் கரையில் இருந்து எழக்கூடிய எந்தவொரு பாதுகாப்பு பிரச்சினையையும் இந்தியா அணுகவேண்டியிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில், இலங்கைத் தீவில் இப்போதும் சுடுதணலாக இருந்து வரும் தமிழ்த் தேசியப் பிரச்சினை, தனது தீவிரமான ஈடுபாட்டுடன் மட்டுமே தீர்க்கப்பட கூடியது என்பதையும், தீர்க்கப்பட முடியும் என்பதையும், உள்ளடக்கி நிற்கும் அரசியல் யதார்த்தம், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு விடயத்தில், சீனாவின் அச்சுறுத்தலைப் பொறுத்தமட்டில், தனது கையில் உள்ள மிக வலுவானதோர் பாதுகாப்புக் கவசம் என்பதை இந்தியா நன்றாகவே உணர்ந்து கொண்டிருப்பதால், ஈழப் போரின் முடிவுக்கு பின்னரான காலத்தில், முன் எப்பொழுதும் இருந்திருக்காத அளவுக்கு, எதிர்வரும் புதுடெல்லி பேச்சுவார்த்தைகளில் அதிக முக்கியத்துவத்தை தமிழர் பிரச்சினை, அந்த நாட்டிடமிருந்து ஈர்க்கும் என்றே உறுதியாகச் சொல்ல முடியும்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில், இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக் கண்ணோட்டத்தில், மிக ஆழமானதும் கூர்மையானதுமான ஓர் தீவிர அணுகுமுறை அவசியமாகியுள்ள இன்றைய சூழ்நிலையில், 13வது திருத்தம் தொடர்பில், அதன் முற்று முழுதான நடைமுறைப்படுத்தலை வலியுறுத்தி சாதிப்பதன் ஊடாகவே, இந்தியாவின் தெற்கு எல்லையில், இலங்கை மண்ணின் வடபுலத்தில், மட்டுப்படுத்தப்பட்ட மாகாண சுயாட்சியாக இருந்தாலும் கூட, தமிழர்கள் ஆதிக்கம் செலுத்தும் ஓர் அரசியல் - நிர்வாகக் கட்டமைப்பு, இந்திய ஈடுபாட்டோடு நிலைகொள்வது என்பது, இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் இன்றைய இக்கட்டான நிலையில், எந்த அளவுக்கு, சாதகமானதோ, அதைவிட பல மடங்கு, இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு அது அனுகூலமானதும் அனுசரணையானதும் ஆகும்.

இந்திய அரசியல், ராஜதந்திர மற்றும் ஊடக மட்டங்களில், இந்தியாவின் தேசியப் பாதுகாப்பில் இலங்கைத் தீவின் பூகோள அரசியல் முக்கியத்துவம் சம்பந்தப்பட்ட வரையில், இன்றிருப்பதைப் போல, தீவிரமானதும் ஆக்ரோஷமானதுமான ஆர்வம், ஒரு சில சந்தர்ப்பங்கள் தவிர, கடந்த காலங்களில் இருந்ததில்லை!

இதற்கான அடிப்படைக் காரணம், இந்தியாவின் வட எல்லையில் தொடர்ந்து நிலைத்து வந்திருக்கும் சீனச் சவால், சமீபகாலத்தில் தெற்கு எல்லையிலும், இலங்கை கரையில் இருந்து எழுந்திருப்பதுதான்!

எனவே, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இனிமேல் எழக்கூடிய எந்தவொரு கணிசமான மாற்றமோ, திருப்பமோ இந்திய ஈடுபாடு இல்லாமல் இடம்பெற முடியாது என்னும் யதார்த்தத்திற்கு அப்பால், அத்தகைய மாற்றம் எதுவும் இந்திய ஆதரவுடன் அல்லது ஆமோதிப்புடன், நிகழ்வதே இந்தியாவுக்கும் உகந்தது - சகல விதத்திலும்!

இந்நிலையில், புதுடெல்லியில் இலங்கை ஜனாதிபதி ரணில், இந்தியப் பிரதமர் மோடியுடன் நடத்தப் போகும் பேச்சுவார்த்தைகள், இந்திய தேசிய மட்டத்தில் இப்போது ஆர்வத்தோடு எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆளும் கட்சியான பாரதீய ஜனதாவின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை 13வது திருத்தம் தொடர்பில் சில நாட்களுக்கு முன்னர் லண்டனில் வைத்து தெரிவித்த கருத்துக்கள் இந்த எதிர்பார்ப்பை பரந்துபட்ட அளவில் பல மடங்கு அதிகரிக்கச் செய்திருக்கின்றன.

அடுத்த வருடம் முற்பகுதியில் நிகழவிருக்கும் இந்தியப் பாராளுமன்ற பொதுத் தேர்தலில், கடுமையான போட்டியை, இப்போது ஒன்றிணையத் தொடங்கியிருக்கும் எதிர்க்கட்சிகளிடம் எதிர்நோக்கி நிற்கும் ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் தலைமை, 543 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய பாராளுமன்றத்தில் தமிழ் நாட்டின் 39 ஆசனங்களோடு, அருகில் அமைந்திருக்கும் குட்டி மாநிலமான பாண்டிச்சேரியின் தனியொரு ஆசனத்தையும் சேர்த்து மொத்தம் 40 எம்.பிக்களை தெரிவு செய்யப் போகும் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து, சில ஆசனங்களையாவது வென்றெடுப்பதற்கு எந்த அளவிற்கு ஓர் பலமான கூட்டணி தேவையோ, அதற்கு எவ்விதத்திலும் குறையாத அளவிற்கு ஈழத்தமிழர் விவகாரத்தில் திட்டவட்டமானதும் உறுதியானதுமான அரசியல் நிலைப்பாடு இந்தியத் தரப்பில் அவசியம் என்பதை நன்றாகவே உணர்ந்து கொண்டிருக்கின்றது.

அத்தகைய நிலைப்பாடு ஒன்றே, இலங்கைத் தமிழர் பிரச்சினையில், தமிழ்நாட்டு மக்கள் கொண்டிருக்கும் உணர்வுபூர்வமான ஈடுபாட்டுக்கு, பாரதீய ஜனதா காட்டும் பரிவு மிக்க அங்கீகாரமாக இருக்க முடியும் என்பதை, அக்கட்சியின் தலைவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.



**13ஐ முழுமையாக தருவதற்கு கூட, சிங்களத் தலைமை தயாரில்லை எனில், அந்தத் தரங் கெட்ட நிலைப்பாட்டை சுட்டிக்காட்டவும், தட்டிக் கேட்கவும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைக் கொண்டுவந்த இந்திய அரசுக்கே இயலவில்லை எனில், இலங்கையில் வாழும் தமிழ் மக்கள், குறிப்பாக, ஈழம் எனப்படும் தமிழர் தாயகத்தில் எஞ்சி நிற்கும் தமிழ் மக்கள் என்னதான் செய்வது...?**

அதனால் தான், ஈழத்தமிழர் பிரச்சினையை பாரதீய ஜனதாக் கட்சி, ஓர் அரசியல் பிரச்சினையாக இப்போது கையில் எடுத்திருக்கின்றது.

இதே வேளையில், புதுடெல்லி பேச்சுவார்த்தைகளின் முடிவில் இருதரப்பும் விடுக்கும் கூட்டறிக்கையில், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வரும் 13வது திருத்தம், முழுமையாகவும் விரைவாகவும் இனியாவது இலங்கை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுமா? என்ற கேள்வி, இலங்கைத் தமிழர் மத்தியில், நிலத்திலும், புலத்திலும் பரந்த அளவில் எழுந்து நிற்கின்றது.

இந்த நிலைமையில், 13வது திருத்தம் தொடர்பில், இலங்கை அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பதை விட, என்ன செய்வதற்கு அது தயாராக உள்ளது என்பதே பொருத்தமான கேள்வியாக இருக்க முடியும்.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று, பொருளாதார நெருக்கடியில் சற்று தளர்வு ஏற்பட்டவுடன், வெளிநாட்டு உதவிகளை, குறிப்பாக ஐ.எம்.எப் என்றழைக்கப்படும் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து போதுமான கடனை, சாத்தியமானதோர் நீண்ட காலத்தில், திருப்பிச் செலுத்தக்கூடிய விதத்தில் பெற்றுக் கொள்வதே அவரின் குறியாக இருந்து வந்துள்ளது.

மிகுதி அடுத்த பக்கம் பார்க்க...

# தமிழ்க் கட்சிகள் 14இல் - பதின்மூன்று 13இற்கு ஆதரவு!



இந்த நோக்கத்திற்கு, வலுச் சேர்ப்பதற்காகவே தமிழ்க் கட்சிகளோடு, ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க ஆரம்பித்திருந்தார். இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமான வழியில், இதுவரையில் நகரத் தொடங்கியிராத சூழ்நிலையில் கூட, வெகு சமீபத்தில், கடந்த மாதம் இங்கிலாந்தில் வைத்து, பேச்சுவார்த்தைகள் 'சீரியஸாக' நடந்து கொண்டிருப்பது போன்ற ஒரு போலித் தோற்றத்தை உருவாக்க முனைந்த ஜனாதிபதி, தமிழர் தரப்பு ஒத்துழைக்குமானால், அரசியல் தீர்வு என்பது, கைக்கு எட்டிய தூரத்திற்கு விரைவில் வந்துவிடும் என்ற தொனியொடும், தோரணையோடும் அறிவிப்புக்களை அட்டகாசமாக வெளியிட்டிருந்தார்.

இந்த ஆரவார அறிவிப்புக்கள், சமீபத்தில் பேச்சுவார்த்தை மேசையில் ஜனாதிபதி ரணிலின் முன்னால் ஒருமுறையாவது உட்கார்ந்த சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்களில், தனியொரு பாராளுமன்ற உறுப்பினரான விக்னேஸ்வரனைத் தவிர, ஏனைய அனைவராலும் திட்டவட்டமாக நிராகரிக்கப்பட்டன.

இத்தகைய அணுகுமுறை கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிறிது காலத்திற்கு முன்னர், 13வது திருத்தம் தொடர்பில் பிரஸ்தாபிக்கையில், "அது அரசியல் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அரசியல் சாசனம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். 13வது திருத்தத்தை நிராகரிப்பவர்கள், பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை கொண்டு வந்து, அரசியல் சாசனத்தில் இருந்து அதனை நீக்கி விடட்டும்." என்று, ஒருவித, சவால் விடுக்கும் தோரணையில் பேசியிருந்தார்.

இதே ரணில் புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்திக்கையில், 13 தொடர்பில் எந்த நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றார் என்பதே, பிரதான கேள்வியாக இப்போது எழுந்திருக்கிறது.

ரணில் 13வது திருத்தத்தை நிராகரிக்கப் போவதில்லை, நிராகரிக்கவும் முடியாது. அப்படியான கேள்வி எதுவும் கிடையாது.

உண்மையில் கேள்வி எதுவெனில், 13வது திருத்தத்தை, அதில் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் குறிப்பிடப்பட்டிருக்கும் காணி மற்றும் பொலீஸ் அதிகாரங்களோடு, மாகாணசபைகளுக்கு நடைமுறையில் வழங்க ரணில் முன்வருவாரா? என்பது தான்!

காணி மற்றும் பொலீஸ் அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்கக் கூடாது என, கட்சி வேறுபாடுகள் கடந்த நிலையில், ஆளுங்கட்சி மற்றும் சிங்கள எதிர்க்கட்சிகளில் உள்ள பல சிங்கள பௌத்த வெறியர்கள் அதிதீவிரமாக உள்ளனர்.

ஆனால், பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, 13வது திருத்தத்தின் முழுமையான நடைமுறைப்படுத்தலுக்கு தனது சம்மதத்தை ஏற்கனவே பகிரங்கமாக தெரிவித்திருந்தது.

எதிரணியில், இரண்டாம் நிலையில் வைத்து நோக்கப்படும் - ஜே.வி.பி அடங்கிய -தேசிய மக்கள் சக்தியும், அதனைத் தொடர்ந்து தனது ஆதரவை வெளிப்படுத்தியது.

இந்தச் சூழ்நிலையிலும் கூட, எதிரணியில் உள்ள ஒரு சில சிங்களக் கட்சிகள் மற்றும் அவற்றை வழிநடாத்தும் சிங்கள இனவெறியர்கள் மட்டுமன்றி, ஆளும் பொதுஜன பெரமுனக் கூட்டணியில் உள்ள, நாடறிந்த பேரினவாதப் பிரமுகர்களும் 13ம் திருத்தத்தை முற்று முழுதாக எதிர்க்கின்றனர்.

## இந்தியாவுக்கே இயலாமல் போனால் ஈழத் தமிழர்கள் என்ன தான் செய்வது...?

இந்த நிலையில், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தனது வெற்றியை இலக்காக வைத்து, காய்களை நகர்த்திக் கொண்டிருக்கும் ஜனாதிபதி, புதுடெல்லியில் 13 தொடர்பில் என்ன சொல்லப் போகின்றார்?

13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த கால அவகாசம் வேண்டும் என்று சொல்லப் போகின்றாரா? அல்லது அதையே, வேறு வார்த்தைகளில், 13ஐ படிப்படியாக நடைமுறைப்படுத்தலாம் என்று கூறப் போகின்றாரா?

ஒன்று மட்டும் நிச்சயம்! 13ஐ முழுமையாகவும் விரைவாகவும் நடைமுறைப்படுத்துவதாக, திட்டவட்டமான எதையும் அவர் கூறப் போவதில்லை! கழுவுகின்ற மீனில் நழுவுகின்ற மீனாக, 13 தொடர்பில், இந்தியாவுக்கு நோகாமல் கதை விடுவது எப்படி என்பதை யாரும் ரணிலுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை.

அதிகாரப் பீடத்தில் அமரும் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு, இது கைவந்த கலை! ரணிலுக்கும் கூட!! ஆயினும் ஒரேயொரு வித்தியாசம்!

ரணில் தனது அரசியற் குரு, முன்னாள் ஜனாதிபதி - தாய்மாமனும் கூட - ஜே.ஆர்.ஜயவர்த்தனவிடம் கற்றுக்கொண்ட அரசியல் பாடத்தின் அடிப்படையில், புதுடெல்லியில் இருந்து, 13 தொடர்பில் எந்தவொரு விதத்திலும் இந்தியாவோடு உரசாமலும், அதேவேளையில், தென்னிலங்கை அரசியற் களத்தில், தனக்கு பிரச்சினை ஏற்படுத்திக் கொள்ளாமலும், 'போன மச்சான் திரும்பி வந்தார் - பூமணத்தோடு' என்னும் அந்த பழையகால தமிழ்ப் பாடலை ஞாபகப்படுத்தும் விதத்தில், இலங்கை திரும்புவதற்கே சகல சந்தர்ப்பங்களும் அவருக்கு சார்பாக உள்ளன.

இந்திய ராஜதந்திரத்துடன் மோதிக்கொள்ளாமல், அணைத்து, அரவணைத்து சாதிப்பது எப்படி என்பதை, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த மற்றும் அமரக் கூடிய அனைத்துச் சிங்கள அரசியல் தலைவர்களும் அத்துபடியாக தெரிந்து வைத்திருந்ததும், வைத்திருப்பதும் சிங்களத் தேசியப் பாரம்பரியமாக இருக்கையில், ஆனானப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு புதுடெல்லி விஜயம் பெரும் பிரச்சினையாக இருக்குமா? என்ன?

ஆனாலும் ஒன்று! அரசியல் சாசனத்தில் அடங்கியிருக்கும் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய, தனது பதவிவழி - அரசியல் சாசனக் கடமையிலிருந்து ரணில் பல்டி அடித்தால், ஈழத்தமிழர்கள் தரப்பில் நிச்சயம் பதிலடி இருக்கும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தமிழர் வாக்குகளை அள்ளிக் கொள்ளலாம் என்ற அவரினதும் அவரது மதியூக ஆலோசகர்களினதும் தேர்தல் கணிப்பீடு, நிச்சயம் சவாலுக்கு உட்படுத்தப்படும்.

சுதந்திரத் தமிழ் ஈழம் கோரிப் போராடிய காலத்தில், இந்திய அரசின் தலையீட்டினால் 1987 ஆடி மாதம் ஏற்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தம், இணைப்பாட்சியைக் கூட, தமிழ்த் தேசத்திற்குத் தரவில்லை.

மாறாக, ஒற்றையாட்சி முறையின் இறுக்கமானப் பிடிக்குள், மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியே மாகாண மட்டத்தில் தமிழ்த் தேசத்துக்கென இந்தியாவால் உருவாக்கப்பட்டது! - உருவாக்கப்பட முடிந்தது!!

இன்று தமிழ் ஈழப் போராட்டம் என எதுவும் கிடையாது. சமஷ்டி எனப்படும் இணைப்பாட்சி பற்றி தமிழ்த் தேசியக் கட்சிகள் இடைக்கிடையே பேசுகின்றன. அவ்வளவு தான்!

13வது திருத்தம் கொண்டுவரப்பட்டு 36 வருடங்கள் முழுதாக உருண்டோடிவிட்ட நிலையிலும், தமிழ் மாநிலத்தில் இப்போது செயற்பட்டுகொண்டிருக்கும் 14 தமிழ்க் கட்சிகளில், ஒன்றே ஒன்றைத் தவிர, மிகுதி அனைத்தும் - டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி, பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தனின் விடுதலைப் புலிகள் மக்கள் கட்சி, முன்னாள் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சி உட்பட - மொத்தம் பன்னிரெண்டு கட்சிகள், 13வது திருத்தத்தின் முழுமையான நடைமுறைப்படுத்தலை ஆதரித்து நிற்கையில், 13ஐ முழுமையாக தருவதற்கு கூட, சிங்களத் தலைமை தயாரில்லை எனில், அந்தத் தரங் கெட்ட நிலைப்பாட்டை சுட்டிக்காட்டவும், தட்டிக் கேட்கவும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைக் கொண்டுவந்த இந்திய அரசுக்கே இயலவில்லை எனில், இலங்கையில் வாழும் தமிழ் மக்கள், குறிப்பாக, ஈழம் எனப் படும் தமிழர் தாயகத்தில் எஞ்சி நிற்கும் தமிழ் மக்கள் என்னதான் செய்வது...?

**இதற்கான பதில்கள் ஒரு சில உண்டு என்றாலும், அவை, பெரும்பாலும் சங்கடமான சமாச்சாரங்கள்! அவை நமக்கு வேண்டாம்!!**

**சாத்தியமான வழிகளை சிந்தித்தால், அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, தாராளமாக செயற்பட முடியும். அவற்றில் உடனடியாக செயற்படுத்துவதற்கும் ஓர் வழி உண்டு!**

**ஜனாதிபதி என்ற முறையில், தனது அரசியல் சாசனக் கடமையின் அடிப்படையில், 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில், ரணில் பல்டி அடித்தால், தமிழர் தரப்பில், அதற்கு நிச்சயம் பதிலடி உண்டு.**

**அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டுவது என்ற அவரது அரசியல் கனவு, நனவாகக் கூடிய வாய்ப்பினை சிதறடிக்கும் விதத்தில், தமிழர்கள் - மானமுள்ள தமிழர்கள், தமது வாக்குரிமையை பிரயோகிப்பது தான் அந்த பதிலடி!**

**புதுடெல்லி பேச்சுவார்த்தைகள் இன்னும் சில நாட்களில்! அடுத்த ஜனாதிபதி தேர்தல் இன்னும் சில மாதங்களில்...!! பார்க்கலாம்...!!!**

பார்த்தசாரதி

## அமெரிக்காவிலும் ஒலித்தது பகவத் கீதை! அலைகடலேன திரண்டனர் மக்கள்!!



பகவத் கீதையை உச்சரிக்கும் நிகழ்வில் பத்தாயிரம் பேர் கலந்து கொண்டமை அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தின் ஆலன் கிழக்கு மையத்தில் பகவத் கீதையை உச்சரிக்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

அந்த வகையில், இந்த நிகழ்வினை யோகா சங்கீதா மற்றும் எஸ். ஜி.எஸ். கீதா பவுண்டேசன் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

அந்த, நிகழ்விற்கு 4 வயது முதல் 84 வயதிற்கு உட்பட்ட முழுவதுமாக 10 000 பேர் வரை கலந்து கொண்டுள்ளனர்.

குரு பூர்ணிமாவை முன்னிட்டு நடந்த இந்த நிகழ்வானது, உலக புகழ் பெற்ற ஆன்மீக சுவாமிகளான பூஜ்ய கணபதி சச்சிதானந்த ஜி முன்னிலையில் இடம்பெற்றுள்ளது.

இதனை மைசூர் நகரிலுள்ள அவதூத தத்தா பீடம் ஆச்சிரமம் தெரிவித்துள்ளது.

அங்கு, சுவாமியின் வழிகாட்டுதலின் பேரில் குறித்த நிகழ்வில் பங்கேற்றவர்கள் கீதை உச்சரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், அவர்களில் பலர் 8 ஆண்டுகளாக சுவாமியை பின்பற்றி அதனை நினைவில் கொள்ளும் வகையில் மனப்பாடம் செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அமெரிக்காவில் இந்து ஆன்மீக தன்மையை பரப்பும் நோக்குடன் கடந்த சில நாட்களாக சுவாமிஜி இந்த நாட்டில் நிகழ்வினை நடத்தி வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

## ஆயுர்வேத திருத்தச் சட்டத்தின் ஊடாக பாரம்பரிய மருத்துவம் அழிவடையும்! சஜித் எச்சரிக்கை!!

அவசர அவசரமாகக் கொண்டு வரப்படும் சட்டங்களால் பயனில்லை. சுதேச மற்றும் பாரம்பரிய மருத்துவத் துறைகள் இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டும். புதிய ஆயுர்வேத திருத்தச் சட்டத்தின் ஊடாக இந்நாட்டின் பாரம்பரிய மருத்துவத்துறையை முற்றாக அழிக்க தற்போது அரசாங்கம் தயாராகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஆயுர்வேதம் மற்றும் சுதேச மருத்துவம் தொடர்பாக நிலவும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஆயர்வேத, சுதேச வைத்தியர்கள் பிரதிநிதிகள் குழுவினரைச் சந்தித்த போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் அங்கு மேலும் கூறியதாவது:- ஆயர்வேத மருத்துவத் துறைக்கு சட்டக் கட்டமைப்பொன்று தேவை என்பதை நானும் ஏற்றுக் கொள்கின்றேன்.

ஆயுர்வேத மருத்துவம் மற்றும் பாரம்பரிய மருத்துவ துணைத் துறைகள் இரண்டுக்கும் பொருந்தக்கூடிய வகையில் சட்டக் கட்டமைப்பைத் தயாரிக்க வேண்டும்.

அவசர அவசரமாக இவ்வாறான சட்டமூலங்களை கொண்டு வருவதற்கு பதிலாக சுகாதார அமைச்சர், சுதேச மருத்துவத்துறை அமைச்சர் உள்ளிட்ட தரப்பினர் இது தொடர்பில் முறையான கலந்துரையாடலை நடத்தி நிலைமையை சரியாக புரிந்துகொள்வதையே செய்ய வேண்டும்.

தற்போது முன்வைக்கப்படவுள்ள சட்ட மூலத்தை குறித்து தரப்புகள் உடனடியாக ஆராய்ந்து தெளிவான நிலைப்பாட்டை எட்ட வேண்டும் - என்றார்.

# ‘அஸ்வெசும’ திட்டம்! அப்பாவிகளின் அடி மடியில் கை வைத்தது அரசு!!



சிறு சுயதொழிலின் சிறிய வருமானமும், சமுர்த்திக்கொடுப்பனவும், தொண்டு நிறுவனமொன்றின் அவ்வப்போதான உதவிகயையும் கொண்டே அவர்களது வாழ்க்கையை நடாத்தி வருகின்றார்கள். இந் நிலையில், இந்த இளம் தாயார், கடந்த வாரம் முதலாம் கட்டமாக வெளியிடப்பட்ட ‘அஸ்வெசும’ பெயர் பட்டியலில் தனது பெயர் காணப்படுகின்றதா என்று அவசரமாக தேடுதல் நடத்துகிறார்.

அப்பட்டியலில் அவரது பெயரை காணவில்லை. அலறியடித்துக்கொண்டு ‘ கிராம உத்தியோகத்தரிடம் செல்கிறார். ‘புதிய நிவாரண பட்டியலுக்கும் எனக்கும் தொடர்பு இல்லை’ என்று பதிலளிக்கின்றார் கிராம உத்தியோகத்தர். அடுத்து அவர் சென்ற இடம் சமுர்த்தி உத்தியோகத்தர். அங்கும், ‘பட்டியலை நான் தயாரிக்கவில்லை’ என்றே பதில் வழங்கப்படுகிறது.

இறுதியாக என்ன செய்வது என்றெண்ணிய அத்தாயார், அபிவிருத்தி உத்தியோகத்தரை நாடுகின்றார். அப்போது ‘பிரதேச செயலகத்திற்கு செல்லுங்கள். அங்கு மேன்முறையீடு செய்ய முடியும்’ என்று வழிகாட்டி விடப்படுகின்றது. அங்கு சென்றவர் ‘எனது பெயர் பட்டியலில் உள்ளடக்கப்படாமைக்கான காரணம் என்ன’ என்று கோருகின்றார்.

அவஉ அக்காரணத்தினைக் கோரியது வேறு யாரிடமும் அல்ல. தனது வீட்டுக்கு வருகை தந்து தகவல்களைத் திரட்டிய கள உத்தியோகத்தரிடத்தில் தான். அப்போது, அந்த உத்தியோகத்தர், ‘எமக்கு ஒன்றும் தெரியாது, நாம் கோரிய தகவல்களை எடுத்து அனுப்பினோம், உங்களை அவர்கள் (மத்திய அரசு) பட்டியலில் உள்ளடக்கலில்லை’ என்று கையை விரித்து விடுகின்றார்.

தனது வாழ்க்கைக்கு ஏதோவொரு வகையில் கைகொடுத்த சமுர்த்திக் கொடுப்பனவும் இல்லை. புதிய நலத்திட்ட உதவியும் இல்லை என்றாகிவிடவும் அந்த தாயாரின் மன வேதனை ‘கோபமாக’ அதிகாரிகளை நோக்கி கொந்தளித்தது. இறுதியில் பிரதேச செயலாளரால் அவருக்கு மேன் முறையீட்டுக்கான விண்ணப்பம் வழங்கப்பட்டது. அந்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கொண்டு செல்கின்றார். அப்போது அந்த விண்ணப்பத்தை பெற்று சரி பார்க்கும் ஊழியர், “உங்களது மின்சாரக் கட்டணப் பட்டியல் 3,500 ரூபாயை உங்களால் செலுத்த முடிகின்றது என்பதனால் தான் ‘அஸ்வெசும’ பட்டியலில் நீங்கள் உள்வாங்கப்படவில்லை” என்று பதிலளிக்கிறார்.

அப்போது குறித்த தாயார், ‘நான் தங்கியிருப்பது எனது பெற்றோருடன். அவர்கள் தான் மின்சாரப் பட்டியலைச் செலுத்துகின்றனஉ. எனது பெயரில் மின்சாரப் பட்டியல் பதிவே இல்லை’ என்று பதில் கூறுகின்றார். அப்போது, அப்படியா, தவறு நடந்து விட்டது போல, மேன் முறையீடு செய்தால் உங்களுக்கு கொடுப்பனவு கிடைத்துவிடும்’ என்று பதில் கூறுகின்றான். அப்போது, அப்படியா, தவறு நடந்து விட்டது போல, மேன்முறையீடு செய்தால் உங்களுக்கு கொடுப்பனவு கிடைத்து விடும்’ என்று உத்தியோகத்தர் பதிலளித்து விடுகிறார்.

‘அஸ்வெசும’ திட்டத்தின் முதல் கட்டத்திற்கான பெயர் பட்டியல் வெளியிடப்பட்டதை அடுத்து, நிகழ்ந்த பல்லாயிரம் சம்பவங்களில் மேற்படி சம்பவமும் ஒன்றாகும். இது போன்று பல விதமான மனதை நெகிழச் செய்யும் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

அது மட்டுமன்றி, நாடளாவிய ரீதியில் சாதாரண மக்கள் கொதித்தெழுந்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் நிலைமைகளும், நோய்வாய்ப்பட்டவர்கள், முதியவர்கள் போதிய தெளிவின்மையுடன் பிரதேச செயலகங்களில் மணிக்கணக்கில் காத்திருக்கும் காட்சிகளையும் தாராளமாகவே இந்த நாட்களில் காண முடிகின்றது.

இதன் காரணத்தால் தற்போது வெளியிடப்பட்ட ‘அஸ்வெசும’ திட்டத்துக்கான பட்டியல் இறுதியானது அல்ல. ஜூலை பத்தாம் திகதி வரையில் மேன்முறையீடுகளை செய்ய முடியும். அதன் பின்னர் மீண்டும் மீளாய்வு செய்யப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முதல் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க உட்பட நலன்புரி நன்மைகள் சபையின் தலைவஉ பி.விஜயரத்ன வரையில் வாக்குறுதி அளிக்குமளவிற்கு நிலைமைகள் மோசமடைந்து விட்டன.

இவ்வாறான மோசமான நிலைமையை உருவாக்கியது அரசாங்கம் தான். சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகளில் சமூகப்பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழாகவே ‘அஸ்வெசும’ திட்டம் வடிவமைக்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், ஏழைகள் மற்றும் மிகவும் ஏழ்மையானவர்கள் ஆகிய நான்கு சமூகப் பிரிவுகளின் கீழ் இந்தத் திட்டத்தின் நன்மைகள் வழங்கப்படுமென தீர்மாணிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வழமை போன்று உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

அத்துடன், நீண்டகாலத்துக்கு தெரிவு செய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு குறித்த நலத்திட்டத்திற்காக மூன்றாண்டு பட்டியலில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், அந்தப் பட்டியல் கூட அவ்வப்போது மீளாய்வுக்கு உள்ளாக்கும் என்றும் அரசாங்கம் திட்டமிட்டிருந்தது.

மேலும், 2001 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலப் பலன்கள் சட்டத்தின் படி, தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 06 துறைகளின் குறிகாட்டிகளின் கீழ் தெரிவு செய்யப்படுவதோடு, தற்காலிக நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருக்கும் 4 இலட்சம் பேருக்கான 2,500 ரூபா மாதாந்த கொடுப்பனவாக டிசம்பர் 31 வரையிலும் பாதிக்கப்படக்கூடிய 4 இலட்சம் பேருக்கான 5,000 ரூபா கொடுப்பனவு 2024 ஜூலை 31 வரையிலும் வழங்கப்படவுள்ளதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் வறியோர் என்று அறியப்பட்ட பயனாளிகள் 8 இலட்சம் பேருக்கான 8,500 ரூபா கொடுப்பனவும் மிக வறுமையானவர்களுக்கான மாதாந்தம் 15,000 ரூபா கொடுப்பனவும் ஜூலை 01 முதல் மூன்று வருட காலத்திற்கு வழங்கப்படவுள்ளன. தற்போது நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளும் 72,000 மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்தம் 5,000 ரூபா வீதமும், சிறுநீரக பாதிப்புக்கான நிவாரணங்களை பெறும் 39,150 பேருக்கு 5,000 ரூபா வீதமும் முதியவர்களுக்கான கொடுப்பனவுகளை பெறும் 416, 667 பேருக்கு 2000 ரூபா வீதமும் என்ற அடிப்படையிலும் கொடுப்பனவுகள் தொடர்ந்தும் வழங்கப்படவுள்ளன என்பதும் அரசின் திட்டவட்டமான அறிவிப்பாகும்.

அவ்வாறிருக்கையில், ‘அஸ்வெசும’ திட்டம் மக்கள் கிளர்ந்தெழுந்து அரசாங்கத்தினை தூற்றுமளவிற்கு மாறியுள்ளது. போரில் அத்தனையும் இழந்துள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் 23,901 பேர் மாத்திரமே சமுர்த்தி உதவித் தொகையை பெற்றுக்கொள்வதோடு ‘அஸ்வெசும’ திட்டத்திற்கு 16,211 பேர் மட்டுமே தெரிவாகியுள்ளனர்.

இதனடிப்படையில், பாஉக்கின்றபோது, நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் மக்களின் போராட்டங்களிலும் தாக்கங்களிலும் நியாயங்கள் இருக்கவே செய்கின்றன. அதேநேரம் அரசாங்கத்தின் பின்னடைவுகளுக்கு வலுவான காரணங்களும் இல்லாமலில்லை.

முதலாவது, ‘அஸ்வெசும’ திட்டத்திற்காக மீளாய்வு செய்யப்பட்டபோது, களநிலைமைகளை நன்கறிந்த கிராம, சமுஉத்தி, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவில்லை. இவர்கள் ஈடுபடுத்தப்பட்டால் மேலதிக கொடுப்பானவுகளைச் செலுத்த வேண்டியேற்படும் என்பதால் அதனை மட்டுப்படுத்தும் முகமாக பிரதேச செயலகங்களில் இருக்கைகளின்றி பணிக்கமர்த்தப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளர்களே அதிகளவில் ஈடுப்படுத்தப்பட்டனர்.

அவர்கள் வெறுமனே பல்கலைகழக பட்டப் படிப்பினை பூர்த்தி செய்துவிட்டு முன்னனுபவமில்லாத நிலையில் ‘அரச உத்தியோகம்’ என்ற கௌரவ வேடத்தினைத் தரித்துக் கொண்டு இருப்பவர்கள். அத்தகையவர்கள் இப்பணியை முறையாக மேற்கொள்ளவில்லை.

ஆனால் அரசாங்கம் 3,190 அபிவிருத்தியோகத்தர்களும், 205 கிராம உத்தியோகர்களும், 1,127 இதர உத்தியோகத்தர்களும், 1,712 தற்காலிக ஆட்களுமாக 6,728 உத்தி யோகத்தர்கள் இப்பணியில் உள்ளடக்கப்பட்டதாகவே கூறுகின்றது.

அவ்வாறானவர்கள் இருந்தாலும் கூட பல கவனயீனங்களும், அர்ப்பணிப்பின்மையும் வெளிப்பாடுகளும் நடந்துள்ளமை மிகத்தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகின்றது.

இரண்டாவதாக, தெரிவுக்காக பயன்படுத்தப்பட்ட குறிகாட்டிகளின் மின்சாரக் கட்டணப் பட்டியல் போன்ற விடயங்களை உள்ளீர்த்தமை தவறானதாகும். கடந்த பெப்ரவரி மாதம் அரசாங்கம் 66 சதவீதத்தினால் மின்சாரக் கட்டத்தினை அதிகரித்தது. இதனால் ஓர் அலகு மின்சாரத்தைக்கூட பயன்படுத்தாத குடும்பங்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து ஐம்பதாயிரமாகியுள்ளது.

அப்படியிருக்கையில், பயன்படுத்திய மின்சாரக் கட்டணத்தினை செலுத்துவதையும், வாழ்வாதாரத்தினை நகர்த்துவதையும் ஒப்பிட முனைவதானது, ‘மொட்டந்தலைக்கும், முழந்தாலுக்கும்’ முடிச்சுப்போட முனைவதற்கு நிகரானதொரு முட்டாள்தனமாக அணுகுமுறையாகும். இதனை கையெடுத்து அரசாங்கமா அல்லது அரச அதிகாரிகளா என்பதில் தெளிவில்லை.

மூன்றாவதாக, இலங்கையின் வறியவர்கள் எண்ணிக்கையானது, 2019 இல் 4 மில்லியனாக இருந்த நிலையில் தற்போது 7 மில்லியனாக உயர்ந்துள்ளது. இது மொத்த சனத்தொகையில் 31 சதவீதமாகும். இதனால் வறியவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நிவாரணங்கள் பூரணமாக வழங்க முடியாத நிவாரணங்கள் பூரணமாக வழங்க முடியாத நிலைமை அப்பட்டமாகதெரிந்த பின்னரும், அரசாங்கம் தரவுகளை பொருட்படுத்தாது களத்தில் இறங்கியமையாலேயே இத்தகைய பரிதாபமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 17 இலட்சத்து 6 ஆயிரத்து 700 குடும்பங்கள் சமுர்த்தி பயனாளிகளாகவுள்ளன. அதே சமயம், தனிநபரின் வருமானம் தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரத்திணைக் களத்தின் தரவுகளுக்கு அமைவாக 13,777 ரூபாவாக காணப்பட்டாலும், அது இரட்டிப்பாகி 34,000 வரையில் சென்றுவிட்டது.

இப்படியிருக்கையில், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதை மையப்படுத்தியதாக கொண்டு வரப்படும் ‘அஸ்வெசும’ திட்டம் மேற்படி அனைத்து தரப்பினரையும் நிச்சயமாக உள் வாங்கியதாக இருக்காபோவதில்லை. அப்பாவிகளின் அடி மடியில் கைவைத்தேயாக வேண்டியது அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத சூழ்நிலையாகும்..

சூடு பிடித்திருக்கும்
சீனித் தொழிற்சாலைச்
சமாச்சாரம்!
ஐந்து கட்சிகளின்
கூட்டமைப்புக்கு
அக்கினிப்
பரீட்சை..?
உண்மையில்
நடந்தது என்ன?
இப்போது
நடப்பது
என்ன?
விரிவான கட்டுரை
அடுத்தவாரம்!!

தேசியம் www.thesiyamnews.com THESIYAM



# அவுஸ்திரேலியவில் ரோய் இரத்னவேலின் prisoner #1056 நூல் வெளியீடு

ரோய் இரத்னவேல் 1987 இல் ஒரு தமிழ் இளைஞனாக இலங்கையில் அரசியல் கைதியாக கொடூரமான அடக்குமுறை சிறையில் பல மாதங்கள் கழித்தார். அவரது விடுதலைக்குப் பிறகு, அவர் தனது 18 வயதில் தனியாக கனடா வந்தார்.

இலங்கையின் கொடிய சிறைச்சாலையில் அரசியல் கைதியாக இருந்து, இன்று கனடாவின் மிகப்பெரிய முதலீட்டு நிறுவனத்தின் முக்கிய நிர்வாகியாக உயர்ந்து நிற்கும் ஈழத் தமிழ் அகதியின் உணர்வுமிக்க படைப்பே **PRISONER #1056** எனும் நூலாகும்.

ரோய் இப்போது கனடாவின் மிகப்பெரிய தனியார் சொத்து மேலாண்மை நிறுவனத்தில் மிகவும் வெற்றிகரமான நிர்வாகியாக உள்ளார். அவர் பிறப்பால் ஈழத் தமிழர் ஆவார்.

எழுத்தாளர் ரோய் இரட்னவேல் ( **Roy Ratnavel**) எழுதிய அவரது வாழ்க்கை அனுபவ நூலான **Prisoner # 1056** (கைதி #1056) என்னும் நூலை ஏப்ரில் 18, 2023 அன்று கனடாவில் முதலாவதாக வெளியிட்டது. உலகப் புகழ்பெற்ற பதிப்பகங்களில் ஒன்றான பெங்குயின் பதிப்பகத்தின் கனடாப் பிரிவான பெங்குயின் ராண்டம் ஹவுஸ் (**Penguin Random House Company**) பதிப்பகம்.

### 'ஒப்பரேஷன் லிபரேஷன்' கைதி:

நாம் வாழ்ந்த காலத்தில் நடந்த என்றும் எங்கள் மனங்களில் மாறாத றணமாக இருக்கும் அந்த கொடூரமான 'ஒப்பரேஷன் லிபரேஷ'னானது அந்தப் பகுதிகளில் வாழ்ந்த ஒவ்வொருவருக்கும் அவலத்துடன் கூடிய பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியது உண்மையே. அந்த வகையில் இந்தக் கதையானது ஒப்பரேஷன் லிபரேஷன் காலத்து அவரது அனுபவப் பதிவாக உள்ளது.

இலங்கையில் போர்ச்சூழல் நிலவிய காலத்தில் நூற்றுக்கணக்கில் வடபகுதி இளைஞர்கள் கைது செய்யப்பட்டுப் பூசா முகாமில் அடைக்கப்பட்டார்கள். நூலாசிரியர் மாமா பூசாவில் அடைக்கப்பட்டு, பின்னர் பூசாவிலிருந்து விடுவிக்கப்பட்டுக் கனடா வந்தவர். ரோய் இரட்னவேலும் அவ்விதம் அடைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுக் கனடாவுக்குத் தனது பதினேழாவது வயதில் வந்தவர். சிறையில் கைதியாக இவர் அடைக்கப்பட்டபோது சித்திரவதை செய்யப்பட்டுத் துன்பத்தினை அனுபவித்திருக்கின்றார். அப்போது கைதியாக அவருக்குக் கொடுக்கப்பட்ட கைதி இலக்கம் தான் 1056.

ஒப்பரேசன் லிபரேசன் என்ற இராணுவநடவடிக்கையின் மூலம் தமிழர் நிலத்தை கைப்பற்றுவதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தனர்.


1987ம் ஆண்டு இலங்கை இராணுவத்தினர் பருத்தித்துறைக்கு வந்து 14 முதல் 40 வயதுடையை அனைத்து ஆண்களையும் சுற்றி வளைத்ததில் நான் கைதுசெய்யப்பட்டேன்.

### கொடிய சிறையில் அரசியல் கைதியாக :

அவர்கள் எங்களிற்கு கைவிலங்கிட்டு சில கிலோமீற்றர்கள் நடக்கச்செய்து சரக்கு கப்பலொன்றில் ஏற்றினார்கள்.

இலங்கையின் தென்பகுதியில் உள்ள மிக மோசமான வதைமுகாமான பூசாவிற்கு நாங்கள் கொண்டு செல்லப்பட்டோம். என்னை போல் சுமார் 2700 பேருடன் அங்கு தடுத்து வைத்திருந்தனர்.

> **“ஶ்ரீலங்காவின் கொடிய சிறையில் அரசியல் கைதியாக வதைபட்டு, இன்று கனடாவில் மிகப்பெரிய முதலீட்டு நிறுவனத்தின் முக்கிய அதிகாரியாக உயர்வு பெற்ற ஒரு ஈழத் தமிழ் அகதியின் உணர்வுக்கதையே PRISONER #1056 எனும் நூலாகும்”**




அந்த முகாமில் நான் பலவகையான சித்திரவதைகளை எதிர்கொண்டேன். இரும்புவயர்களால் என்னை தாக்கிபைப்களால் அடித்தார்கள் இராணுவ விசாரணையாளர்கள்.

பிளாஸ்டிக் பைப்களில் மண்ணை நிரப்பி தலைகீழாக தொங்கவிடப்பட்டுள்ள எங்களின் கால்பாதங்களின் மீது அடிப்பார்கள்.

அதுமிகவும் வேதனையானதாக காணப்படும். மின்சார சித்திரவதைகளையும் எதிர்கொண்டோம்.

சிலரின் காதுகளில் இருந்து இரத்தம் வந்தது கண்கள் வீங்கியிருந்தன, பார்க்க முடியாத நிலையில் அவர்கள் காணப்பட்டனர். என்னை கைதுசெய்து இரண்டுமாதமாகியும் நான் எங்கிருக்கின்றேன் என்பது எனது குடம்பத்தவர்களிற்கு தெரியாத நிலை காணப்பட்டது. சிங்கள அதிகாரியாக காணப்பட்டாலும் எனது அப்பாவின் நெருங்கிய நண்பராக காணப்பட்ட ஒருவரின் மூலம் எனது குடும்பத்திற்கு தகவலை வழங்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. சில நாட்களின் பின்னர் என்னை சிறைச்சாலையின் வாயிலிற்கு அழைத்தனர் நான் எனக்கு மரணம்தான் என நினைத்தேன். ஆனால் அங்கு எனது தந்தையின் நண்பர் இராணுவசீருடையில் நிற்பதை பார்த்தேன்.

அவர் என்னை சிறையிலிருந்து விடுவித்து எனது குடும்பத்தினருடன் சேர்த்தார்.


எனது பாதுகாப்பிற்காக நான் இலங்கையிலிருந்து வெளியேறவேண்டும் என எனது தந்தை தீர்மானித்தார். எனது அம்மாவின் சகோதரர் கனடாவில் வசித்தார். எனது தந்தை இலங்கையில்உள்ள கனடா தூதரகத்திற்கு மன்றாட்டமாக ஒரு கடிதத்தை எழுதினார். அவர்கள் என்னை நேர்முகத்திற்காக அழைத்தனர். நான் நேர்முகதேர்வின் போது சேர்ட்டை அகற்றி காயங்களை காண்பித்தேன்.

18 வயதில் நான் 1988ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 19ம் திகதி கனடாவின் ரொரன்டோவில் காலடிவைத்தேன்.

அவ்வேளை இலங்கையில் இந்திய படையினர் அமைதிகாக்கும் படையினர் என்ற அடிப்படையில் காலடி எடுத்து வைத்திருந்தனர். அவர்களிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையில் மற்றுமொரு யுத்தம் மூண்டிருந்தது.

### தந்தை சுட்டுக்கொல்லப்பட்டார்:

நான் கனடாவிற்கு வந்து இரண்டு நாட்களின் பின்னர் எனது தந்தை சுட்டுக்கொல்லப்பட்டார். எனது ஒருபகுதி அவருடன் இறந்தது.





ஆனால் அவர் பெருமைப்படக்கூடிய பாரம்பரியத்தை உருவாக்கி வாழவேண்டும் என்பது குறித்து நான் உறுதியாகயிருந்தேன் என ரோய் இரட்னவேல் தெரிவித்துள்ளார்.

கனடா வந்த ரோய் இரட்னவேல் எல்லாக் குடிவரவாளர்களையும் போல் பல்வேறு வேலைகளையும் செய்து, மேலதிகக் கல்வி கற்று தற்போது சுயாதீனமாக இயங்கும், சொத்துக்களைப் பராமரிக்கும் பிரபல நிதி நிறுவனமான **CI Global Asset Management** நிறுவனத்தில் உயர் பதவியிலிருக்கின்றார். கைதி இலக்கம் 1056 எனும் இந்நூல் இவர் ஆங்கிலத்தில் எழுதிய நூல். மேலும் இந்தநூலானது பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்டதோடு மொத்தம் இருநூற்று அறுபது பக்கங்களைக் கொண்டது. மிகக் கனமான சொற்களைக் கொண்ட இந்த ஆங்கில நூலின் முதல் அத்தியாயத்தைப் படிக்கும் போதே அன்றைய அந்த கொடூரமான அனற்காத்தும் , புழுதியும், தூசும் , இரத்தமும், குண்டுகளின் சத்தமும் கத்தல்களும் கதறல்களும், சங்கிலிப் பிணைப்பும், அதில் பிணைக்கப்பட்டோரின் மரண பயத்தை வெளிப்படுத்தும் பார்வையும் மீண்டும் கண்முன் வந்து போயின என இந்நூலைப் பற்றிய விவரணக் குறிப்பை கனடா வாசகர் ஒருவர் பதிவிட்டுள்ளார்.

### அவுஸ்திரேலியாவில் வெளியீடு:

அவுஸ்திரேலியாவில் சிட்னி மற்றும் மெல்பேர்னில் இந்நூல் அறிமுக நிகழ்வு நடைபெற உள்ளது. கனேடிய நாட்டில் அதி கூடிய விற்பனையான **PRISONER #1056** நூல் இங்கும் அறிமுகம் செய்யப்படவுள்ளது புத்தக பிரியர்களுக்கு உற்சாகமான செய்தியாகும்.

அவுஸ்திரேலியாவில் அவருடைய கதைக்குள் தன்னை அடையாளப்படுத்தவும், உற்சாக மூட்டும் விவாதங்கள் மற்றும் புத்தக கையொப்பம் ஆகியவற்றில் ஈடுபடுவதற்காக சிட்னி மற்றும் மெல்பேர்னில் இந்நூல் அறிமுக நிகழ்வு நடைபெற உள்ளது.

### சிட்னி நிகழ்வு:

ஜுலை 15 சனிக்கிழமை 3 மணிக்கு ஹோல்ராய்ட் மையம், 11-17 மில்லர் தெரு, மேரிலான்ட் (**Holroyd Centre, 11-17 Miller Street, Merrylands**)

### மெல்பேர்ன் நிகழ்வு:

ஞாயிறு, ஜுலை 16 @ மதியம் 2 மணிக்கு விக்டோரியன் தமிழ் சமூக மையம், 44 லான்ஸ்டேல் தெரு, டான்டெனோங் (**Victorian Tamil Community Hall, 44 Lonsdale Street Dandenong**)

**- நவீனன் -**

## அரசியல் கைதிகள் விடயத்தில் அநீதியான சட்டம்தான் உள்ளது

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்!!

அரசியல் கைதிகள் விவகாரத்தில் அநீதியான சட்டமே எமது நாட்டில் பின்பற்றப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

கடந்த பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாது செய்ய வேண்டும் என்று கடந்த அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

தற்போது 19 பேர் இந்த சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். எனவே இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதுதான் அனைவரது கருத்தாகவும் உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரித்தானியாவுக்கு விஜயம் செய்திருந்த போது, அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிப்பதாக உறுதியளித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களாகி விட்டன. ஏனைய நாடுகளில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டவுடன் கைதிகள் விடுவிக்கப்படும் நிலையில், இங்கு அநீதியானதொரு சட்டம் தான் அரசியல் கைதிகள் விவகாரத்தில் நீண்ட காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது - என்றார்.

**மக்களின் விடிவிற்காக :**
இலத்தீன் அமெரிக்க மக்களின் விடிவிற்காக ஒரு புரட்சி வீரனின் இறுதிக்கணங்கள் இங்கே தான் எழுதப்படப் போகிறது என்பதை யாருமே அறியவில்லை.



1966ம் ஆண்டு மார்ச் மாதம் காங்கோவை விட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டதன் பின்னர் மார்ச் முதல் ஜூன் வரையிலான கால கட்டத்தில் உருகுவே, பிரேஸில், பராகுவே, அர்ஜெண்டைனா, பொலிவியா நாடுகளில் பய ணம் செய்தார் அந்த புரட்சியின் ஒளிர்முகம்.

1966ம் ஆண்டின் கடைசிகளில் கொரில்லாப் போரை வழி நடத்தும் பொருட்டு பொலிவியா நாட்டுக்குள் நுழைந்த அந்த மாவீரன் அங்கு நிலவிய சமூக மற்றும் பொருளாதார நிலைகளும் எந்நேரமும் அங்கு புரட்சி வெடிக்க சாதகமாக இருந்தது . அத்துடன் பொலிவியா ஐந்து பிற நாடுகளுடன் தன் எல்லையை பகிர்ந்து கொண்டிருந்தது .

பொலிவியாவில் கொரில்லாப் போராட்டம் வெற்றி பெறுமேயானால் அதை மற்ற ஐந்து நாடுகளுக்கும் பரவச் செய்துவிடலாம் என்றே அவர் நினைத்தார்.

**பொலிவியாவில் புரட்சி :**
எதற்காக பொலிவியா நாட்டைத் தேர்ந்தெடுத்தார் என்றால், அமெரிக்கா பொலிவியாவை விட கரிப்பியன் தீவு நாடுகளே தங்கள் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கக்கூடும் என்று நம்பியதும், அதனால் அமெரிக்காவின் பார்வை பொலிவியா மீது அவ்வளவு தீர்க்கமாக விழவில்லை என்பதும் ஒரு காரணமாகும்.

பொலிவியாவில் நடந்த கொரில்லாப் புரட்சியின் போது பொலிவியக் காடுகளில் நீண்ட காலமாக மக்களோடு மக்களாக பதுங்கி இருந்து மக்களுக்காக மரணத்தை மகிழ்வோடு ஏற்ற மாவீரனே 'சே குவாரா' !

மிகுந்த மனவேதனையுடன் ஆஸ்துமாவும் சேர்ந்து 'சே'யை வாட்டி வதைத்தது. போதிய வீரர்கள் இல்லாதது மற்றும் உணவின்மை போன்ற பிரச்னைகளுடன் 'சே' காடுகளில் அலைந்தார். சேயை தேடித் திரிந்த சி.ஐ.ஏ. ஏற்கனவே பொலிவியாவுக்குள்ளும் புகுந்து விட்டது.

> “ ஒரு மாவீரனின் இறுதி மூச்சுக்கான வரலாறு எழுதப்பட தயாராகி கொண்டிருக்கின்றது என்பதை எவருமே அறிந்திருக்க வாய்ப்பில்லை. ”

புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகின்றார்கள் எனும் சே குவேராவின் கூற்றுக்கிணங்க மக்களின் நலனுக்காக தன்னையே தியாகித்த வீரன் தான் சே குவாரா.

இப்பூமிப் பந்தில் பலர் உதிக்குன்றனர், பலர் மறைகின்றனர். ஆயினும் ஒருசிலரே இன்று வரை நீடித்து நிலைத்து சாதனை படைக்கிறார்கள். அந்தவகையில் வரலாற்றின் பொன் எழுத்துக்களால் பதிக்கப்பட்ட பெயரில் ஒன்றே சே குவேரா.


**மருத்துவ பட்டதாரி :**
1928 ஜூன் 14இல் ஆர்ஜென்டீனா, ரொசாரியோவின் செல்வந்த குடும்பத்தில் பிறந்து, ஒரு மருத்துவராக பட்டம் பெற்ற இவர் நினைத்திருந்தால் தன் காலம் முழுவதும் வசதியான வாழ் க்கையை மேற்கொண்டிருக்க முடியும்.

ஆனால் அனைத்தையும் துறந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அதுவும் வேறு நாட்டு மக்களுக்காக போராடிய இவரது போராட்டம் அளப்பரிய ஒன்றாகும்.

பூமியின் நடுவினில் ஆழப்பதிந்த பெயர் பெற்ற சேகுவாரா தனது இறுதிக்கணங்கள் கூட ஒரு பரட்சி வீரனின் உன்னத தியாகத்தை உலகறியச் செயத்து.

**'சே'யின் இறுதிக் கணங்கள் :**

1967 அக்டோபர் 8 தென் அமெரிக்கச் சரித்திரத்தில் ஓர் இருண்ட தினம்.
காலை 10.30 யூரோ கணவாயை ஆறு கெரில்லா வீரர்களுடன் 'சே' கடந்து செல்கிறார். வழி யில் தென்பட்ட ஆடு மேய்க்கும் குண்டுப் பெண் ணின் மேல் பரிதாபப்பட்டு ஐம்பது பெஸோக் களை பரிசாகத் தருகிறார்.



# சே குவேரா எனும் புரட்சிமுகம் !
## எக்காலமும் முகிழும் வீரத்தின் வித்து !!
## எல்லா யுகங்களிலும் ஒளிரும் விடிவெள்ளி !!!

நண்பகல் 1.30 அந்தக் குண்டுப் பெண் பொலிவிய ராணுவத்துக்கு 'சே'வின் இருப்பிடத்தைக்



காட்டிக் கொடுக்கிறாள். அலறிப் புடைத்துப் பறந்து வந்த பொலிவிய ராணுவம் சுற்றி வளைத்துச் சரமாரியாகச் சுடத் தொடங்குகிறது. பதிலுக்கு கெரில்லாக்களும் துப்பாக்கியால் சுடகின்றனர்.

பிற்பகல் 3.30 காலில் குண்டடிபட்ட நிலையில், தன்னைச் சுற்றித் துப்பாக்கியுடன் சூழ்ந்த பொலிவிய ராணுவத்திடம், “நான்தான் 'சே'. நான்இறப்பதைக் காட்டிலும், உயிருடன் பிடிப்பது உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்” என்கிறார்.

காலில் குண்டு அடிபட்ட நிலையில் சே குவேரா மாலை 5.30அருகிலிருந்தலா ஹிகுவேராவுக்கு வீரர்கள் கைத்தாங்கலாக சே'வை அழைத்து வருகின்றனர்.

அங்கிருக்கும் பழைய பள்ளிக்கூடம் ஒன்றில் 'சே' கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் சிறை வைக்கப்படுகிறார்.
இரவு 7.00 'சே பிடிபட்டார்' என சி.ஐ.ஏவுக்குத் தகவல் பறக்கிறது.. அதே சமயம், 'சே' உயிருடன் இருக்கும் போதே இறந்துவிட்டதாகப் பொய்யான தகவல் பொலிவிய ராணுவத்தால் பரப்பப்படுகிறது.

தனக்கு உணவு வழங்க வந்த பள்ளி ஆசிரியையிடம், “இது என்ன இடம்?” என்று 'சே' கேட்கிறார். பள்ளிக்கூடம் என அந்தப் பெண் கூற, “பள்ளிக்கூடமா” ஏன் இத்தனை அழுக்காக இருக்கிறது?” என வருத்தப்படுகிறார். சாவின் விளிம்பிலும் 'சே'வின் இதயத்தை எண்ணி அப்பெண் வியந்து போகிறார்.
அக்டோபர் 9 அதிகாலை 6.00 லாஹி குவெராவின் பள்ளிக்கூட வளாகத்தில் ஒரு ஹெலிகாப்டர் வட்டமடித்தபடி வந்து இறங்குகிறது. அதிலிருந்து சக்திவாய்ந்த ரேடியோ மற்றும் கேமராக்களுடன் ஃபெலிக்ஸ் ரோட்ரிக்ஸ் எனும் சி.ஐ.ஏ. உளவாளி இறங்குகிறார்.


பிடிபட்டிருப்பது 'சே'தான் என அமெரிக்காவுக்குத் தகவல் பறக்கிறது. 'சே'வின் டைரிகள் மற்றும் உடைமைகள் கைப்பற்றப்படுகின்றன. தான் கொண்டுவந்த கேமராவில் 'சே'வை பல கோணங்களில் புகைப் படங்கள் எடுக்கிறார் ஃபெலிக்ஸ். கைவிடப்பட்ட ஏசு கிறிஸ்துவைப் போலக் காட்சி தரும் 'சே'வின் அப்புகைப்படங்கள் இன்றளவும் வரலாற்றின் மிச்சங்கள்.

கசங்கிய பச்சைக் காகிதம் போல கைகால்கள் கட்டப்பட்ட நிலையில், அழுக்கடைந்த ஆடைகளுடன் 'சே'வைப் பார்த்ததும், அவருக்கு அதிர்ச்சி.

மிகுதி அடுத்த பக்கம் பார்க்க...

**அமெரிக்காவுக்கு சிம்ம சொப்பனமான மாவீரன் :**

அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த ஒரு மாவீரனா இந்தக் கோலத்தில் இங்கே நாம் காண்பது என அவருக்கு வியப்பும் திகைப்பும்! பிடிபட்டிருப்பது 'சே'தான் என அமெரிக்காவுக்குத் தகவல் பறக் கிறது. 'சே'வின் டைரிகள் மற்றும் உடைமைகள் கைப்பற்றப்படுகின்றன.



தான் கொண்டுவந்த கேமராவில் 'சே'வை பல கோணங்களில் புகைப் படங்கள் எடுக்கிறார் ஃபெலிக்ஸ். கைவிடப்பட்ட ஏசு கிறிஸ்துவைப் போலக் காட்சி தரும் 'சே'வின் அப் புகைப் படங்கள் இன்றளவும் வரலாற்றின் மிச்சங்கள்.

காலை 10.00 'சே'வை உயிருடன் வைத்துக் கொண்டு விசாரணை நடத்தினால், அது உலகம் முழுக்க அவர் மேல் பரிதாபத்தையும், நாயகத் தன்மையையும் உருவாக்கிவிடும் என்பதால், அவரை உடனடியாகத் தீர்த்துக்கட்டி விடுவதுதான் சரி என சி.ஐ.ஏவிடம் இருந்து தகவல் வருகிறது.

காலை 11.00 'சே'வைச் சுட்டுக் கொல்வது என முடிவெடுக்கப்படுகிறது. யார் அதைச் செய்வது எனக் கேள்வி வருகிறது. 'மரியோ ஜேமி' (Mario Jemy) என்னும் பொலிவிய ராணுவ சர்ஜன் அக்காரியத்துக்காகப் பணியமர்த்தப்படுகிறார்.

மரியோ ஜேமி' (Mario Jemy) கைகள் கட்டப்பட்ட நிலையில், 'சே'வை பள்ளிக்கூடத்தின் மற்றொரு தனியிடத்துக்கு மரியோ அழைத்துச் செல்கிறார். "முட்டி போட்டு உயிர் வாழ்வதை விட நின்று கொண்டே சாவது எவ்வளவோ மேல்!" என்பார் 'சே'. ஆனால், மரியோ அவரை ஒரு கோழையைப் போலக் கொல்லத் தயாராகிறார்.

**வீரனாய் வீழ்ந்த சே :**

தன்னை நிற்க வைத்துச் சுடுமாறு 'சே' கேட்க, அதை அலட்சியப்படுத்துகிறார். "கோழையே, சுடு! நீ சுடுவது 'சே'வை அல்ல ஒரு சாதாரண மனிதனைத்தான்!" இதயம் கிழிக்கும் விழிகள் மின்ன, உலகம் புகழும் மனிதன் சொன்ன கடைசி வாசகம் இதுதான்!

மணி 1.10 மனித குல விடுதலைக்காகத் தன் வாழ்நாளெல்லாம் போராடிய மாமனிதனை நோக்கி துப்பாக்கி குண்டுகள் பாய்கின்றது. ஒன்பது தோட்டாக்களில் ஒன்று, அவரது இதயத்துக்குள் ஊடுருவியது. இனம், மொழி, தேசம் என எல்லைகள் கடந்து பாடுபட்ட உலகின் ஒரே வீரன் இதோ விடை பெறுகிறான்.

சேவின் மார்புகளைத் தோட்டாக்களால் துளைத்தது. ஆனால் அந்த வீரனின் கண் இமைகள் அப்போதுகூட மூடிக்கொள்ளவில்லை. கண்கள் திறந்தபடியேதான் அவர் உயிர் அவரை விட்டுப் பிரிந்தது.




எந்த மண்ணிலோ பிறந்து எந்த மண்ணிற்காகவோ போராடி எந்த மண்ணிலோ துணிச்சலாக மரணத்தை சந்தித்த சே குவேரா இந்த யுகத்தின் ஒப்பற்ற தலைசிறந்த விடுதலைப் போராளி. எக்காலமும் முகிழும் வீரத்தின் வித்தான சே குவேரா, எல்லா யுகங்களிலும் ஒளிரும் புரட்சிமுகமானார்.

- ஜங்கரன் விக்கினேஸ்வரா -

# சவேந்திர சில்வாவை தடை செய்யக்கோரி பிரிட்டன் தொழில்கட்சி எம். பிக்களிடம்

## ஆதரவு திரட்டிய தமிழ் இளையோர் அணி



பிரித்தானிய தொழில் கட்சியினரின் தேர்தல் பிரச்சார நிதி சேகரிப்புக்கான இரவு விருந்து ஒன்று கூடலில் கலந்துகொண்ட தமிழ் இளையோர் அணி அங்கு வருகை தந்திருந்த தொழில் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்களிடம் இலங்கை இராணுவ தளபதியும் இனப்படுகொலை குற்றவாளியுமாகிய சவேந்திர சில்வாவுக்கு எதிராக பிரித்தானியா தடை விதிக்க வேண்டும் என்ற தமது கோரிக்கையை எடுத்து விளக்கியதுடன், பிரித்தானிய அரசு உடன் நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்துமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் பல்லாயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதுக்கு காரணமான 58 வது படைப்பிரிவிற்கு தலைமை தாங்கி இராணுவத்தை நேரடியாக வழிநடத்திய சவேந்திர சில்வாவை தடை செய்ய போதுமான ஆதாரங்களை யஸ்மின் சூக்கா தலை மையிலான சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்டம் (ITJP) கடந்த ஏப்ரல் 2021 இல், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்கு சமர்ப்பித்திருந்தது. ஆனால் இதுவரையில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் பிரித்தானியாவின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் இது தொடர்பிலான தொடர் சந்திப்புக்களை இளையோர் அணி மற்றும் சித்திரவதையில் தப்பித்த்வர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இதில் தமிழர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் மனித உரிமைகள் ஆர்வலர்கள் மற்றும் இரண்டாம் தலைமுறை என பலர் கலந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தங்களை வழங்கி வருகின்றனர்.

இந்த வகையிலே ஜ"லை 4 ஆம் திகதி நடைபெற்ற பிரித்தானிய தொழிற்கட்சியின் தேர்தலுக்கான நிதி சேகரிப்பு இரவு விருந்து ஒன்று கூடலில் கலந்துகொண்ட தொழிற் கட்சியின் முக்கிய பிரமுகர்களை சந்தித்த இளையோர் அணி அதனை சவேந்திர சில்வாவுக்கு எதிரான பிரச்சாரத்துக்கான களமாக பயன்படுத்திக் கொண்டனர்.

இந்த விடயம் வெளிவிவகார அமைச்சர் கௌரவ. டேவிட் லாம்மி (Hon David Lammy-Shadow Foreign Affairs Minister) தனது உரையில், தொழிலாளர் கட்சி தமிழ் இலங்கை மக்களின் போராட்டங்களை அறிந்திருப்பதாகவும், அடுத்த தேர்தலில் அவர் வெளியுறவு செயலாளராக பதவியேற்றால், தொழிலாளர் கட்சி அவர்களுக்கு நம்பிக்கையை அளித்து அவர்களின் நலன் பேணப்படுவதை உறுதி செய்யும் என்றும் கூறினார்.

மேலும் மேர்டன் கவுன்சிலின் தலைவரான ரோஸ் கரோட் (Ross Garrod), மைக் பிரண்ட் (Mike Brunt) மேயர், கொலியர்ஸ்வுட்டில் இருந்து மெர்டன் கவுன்சிலர் கரோலின் கூப்பர் மார்பியா (Caroline cooper Marbiah), மேர்டனின் கவுன்சிலரான ஸ்டீபன் அலம்பிரிடிஸ் (Stephen alambritis), சவேந்திர சில்வாவை தடை செய்யவும் எந்தி சவேந்திர சில்வாவை தடை செய்யும் பிரச்சாரத்திற்கு ஆதரவு அளித்தனர்.

தொழிற்கட்சிக்கான தமிழர்கள் அமைப்பின் தலைவரான சென் கந்தையா அவர்களின் தலைமையில் செயற்பாட்டாளர்களான விஜய் விவேகானந்தன், வாகீசன் விசாகரெட்ணம், கனகசபாபதி கார்த்திகேசன், மொஹமட் நிஃப்ராஸ் மொஹமட் நவ்ஃபர், நிஷாந்தன் நித்தியானந்தன், அமல் ராஜ் ஜெயகுமார், தேவராசா கஜன், மனோஜ் பிரசன்னா, ரோனிஸ்டன் ஆண்டனிஸ் உதயகுமாரன், ராஜசேகர் ராமகிருஷ்ணன், சசீஸ்கண்ணா நடராஜா, சேனவிரத்ன பண்டார, விதுரா விவேகானந்தன், மற்றும் நாகரத்தினம் சாண்ல்டியன் ஆகியோர் கொண்ட அணியே மேற்படி பிரச்சார நடவடிக்கையை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

வட கிழக்கு மாகாணத்துக்கான தேசியம் பத்திரிகைக்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை!

- செய்தி ஆசிரியர்
- தட்டச்சு செய்பவர்
- விளம்பர முகாமையாளர்
- நேரடி விநியோகஸ்தர்

தொடர்புகளுக்கு :
+94 76 567 3339
+94 77 149 9094



கல்வி,சமூக,அரசியல் வாராந்த இதழ்!

# குண்டு துளைக்காத கவசத்தை அணிந்தபடி பராக்கிரமம் காட்டுகிறார் சரத் வீரசேகர!

## - சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தா கண்டனம்! -

குருந்தூர் ஆலய வழக்குத் தொடர்பில், மிக மோசமான இனவாதக் கருத்துக்களை, தனது சிறப்புரிமை என்கின்ற குண்டு துளைக்காத கவசத்தை அணிந்தபடி, பாராளுமன்றத்தில் சரத்வீரசேகர கக்கியிருப்பது மிக மட்டரகமான கோழைத்தனமாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என்.சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

குருந்தூர்மலை ஆலய விவகாரம் என்பது, முல்லைத்தீவு நீதி மன்றத்தின் முன்னால் ஒரு வழக்காக இப்போதும் இருக்கையில், அந்த வழக்கு தொடர்பான விடயங்களை பிரஸ்தாபித்தும், நீதிபதியின் நடவடிக்கைகளை விமர்சித்தும் பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர, மிக மோசமான இனவாதக் கருத்துக்களை, தனது சிறப்புரிமை என்கின்ற குண்டு துளைக்காத கவசத்தை அணிந்தபடி பாராளுமன்றத்தில் வெளியிட்டிருப்பது மிக மட்டரகமான கோழைத்தன



மாகும்.

ஒரு நீதிபதியின் கடமைவழி நடவடிக்கைகளைப் பற்றி பிரஸ்தாபித்து விவாதிப்பதானால், அதற்கென தனியான ஒரு பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட வேண்டும். அதை செய்ய முயற்சிக்காமல், பாராளுமன்ற சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்து, வக்கிரம் நிறைந்த இனவாத சிந்தனையை சரத் வீரசேகர பாராளுமன்றில் கக்கியிருக்கின்றார்.

பாராளுமன்றத்தில் மிகக் குறைவான உறுப்பினர்கள் சமூகமளித்திருந்த சூழ்நிலையில், தனது பராக்கிரமத்தை தனக்கே உரிய பாணியில் சரத்வீரசேகர நிரூபிக்க முயன்று, ஒட்டுமொத்த நீதித் துறையின் சுதந்திரத்துக்கும் சவால் விடுத்திருக்கின்றார். இது எப்படி அனுமதிக்கப்பட்டது என்பது ஆச்சரியமளிக்கின்றது.

இந்த விடயத்தில், நீதித்துறையின் சுதந்திரத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் மதிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், கட்சி மோதல்களையும் இனமத வேறுபாடுகளையும் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, பொறுப்புணர்ச்சியோடு தமது எதிர்ப்பை வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

நாட்டின் சகல சட்டத்தரணிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இந்த விவகாரத்தில் தகுந்த நடவடிக்கைகளை விரைவாக எடுக்கும் என்றே எதிர்பார்க்கின்றோம்.

# 5000 மாணவர்களுக்கு கடன் ஓகஸ்ட் 7 வரை விண்ணப்பிக்கலாம்!

உயர் கல்விக்காக வட்டியல்லா கல்விக் கடனை பெறுவதற்கு கடந்த செவ்வாய்க்கிழமை முதல் விண்ணப்பிக்க முடியும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்கள் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்காக இந்தக் கடன் திட்டத்தின் கீழ் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இதன்போது, தொழில் கல்வி பாடநெறிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இந்தக் கடன் திட்டத்துக்காக எதிர்வரும் ஓகஸ்ட் 7 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒரு சண்டியர் போல தன்னை காண்பிக்க முயல்கிறார் சரத் வீரசேகர!

## பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் விமர்சனம்!!



தன்னை ஒரு சிங்கள அபிமானியாகவும், சிங்கள தேசியவாதியாகவும் காண்பித்துக்கொள்ளும் சரத் வீரசேகர கூறுகின்ற கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்வதில்லை என்றும், சரித்திரத்தை அறிந்துகொள்ளாமல் "இலங்கை சிங்கள பௌத்த நாடு" என்று அவர் கூறுவது அவரது அறியாமையையே காண்பிக்கிறது என்று ஓய்வு பெற்ற நீதியரசரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

"சரத் வீரசேகரவுக்கு தன்னை ஒரு சண்டியர் போன்று காண்பித்துக்கொள்ளவேண்டிய தேவை இருக்கலாம். ஆனால், மீண்டும் மீண்டும் இலங்கையை சிங்கள பௌத்த நாடு என்று கூறுகின்ற அவர், முதலில் சரித்திரத்தை அறிந்துகொள்ளவேண்டும். துட்டகைமுனு சிங்களவர் அல்ல என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரே விடயத்தை நூறு முறை கூறுவதால் அது உண்மையாகிவிடாது. அதே போன்று நீதிபதியை அவமதிக்கும் விதமாக சரத் வீரசேகர கூறியிருக்கும் கருத்துக்கள் மிக மிகக் கேவலமானவையாகும்" என்றும் விக்னேஸ்வரன் கண்டனம் வெளியிட்டார்.

# நீதிபதி தனது கடமையைத்தான் செய்தார்! சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு!!



நாட்டின் நீதித்துறையை அவமதிக்கும் வகையில் சரத் வீரசேகர வெளியிட்டுள்ள கருத்தை கடுமையாக கண்டிப்பதாக தெரிவித்த இலங்கை தமிழரசு கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், சரத் வீரசேகர எப்போதும் இனவாத கருத்துக்களையே வெளியிட்டுவருவதாக சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, "குருந்தூர் மலை விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பு மீறப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட பின்னணியிலேயே, அதனை பார்வையிடுவதற்காக நீதிபதி அங்கு பிரசன்னமானார்.

அவ்வாறிருக்கையில், தனது பணியைச் செய்த நீதிபதியொருவரை பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி இவ்வாறு விமர்சிப்பது ஏற்புடையதல்ல" என்றும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

# பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்! - அமைச்சர் ஜீவன் எச்சரிக்கை!!

பெருந்தோட்ட தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டும் வகையிலும், அவர்களுக்கான தொழில் உரிமைகளை வழங்குவதற்கு மறுக்கும் வகையிலும் செயல்படும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் அமைச்சர் ஜீவன் தொண்டமான்.

ஹற்றன் பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களுடனான சந்திப்பின் போதே அவர் இவவாறு எச்சரிக்கை விடுத்தார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் உழைப்பை மாத்திரம் சுரண்டிக்கொண்டிருக்கும் தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க போவதாகவும், தீர்வை வழங்காவிட்டால் ஹற்றன் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிக்கு எதிரா



கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில், தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என தோட்ட நிறுவன தரப்பில் அமைச்சருக்கு உறுதியளிக்கப்பட்டது.

# 8,9 வருடங்கள் ஆகிவிட்டது - இனியாவது காட்டலாம் சுமந்திரனை சவாலுக்கு அழைத்த மைத்திரி





நல்லாட்சிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உடன்பாடு ஒன்று மேற்கொண்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை முன்னாள் அதிபர் மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார்.

ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்துக்களை பகிரும்போது அவா் இவ்வாறு தெரிவித்தார்.

நீங்கள் ஆட்சியில் இருந்த காலப்பகுதியில் உங்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் ஏதாவது எழுத்து மூலமாக ஆவணங்கள் கைச்சாத்திடப்பட்டனவா என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர்,

"எந்தவொரு உடன்படிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எண்பது வீதமான தமிழ் மக்கள் எனக்கு வாக்களித்திருந்தார்கள். தேர்தலுக்கு முன்போ தேர்தலுக்குப் பின்போ அவர்களுடன் எந்தவொரு எழுத்து மூலமான உடன்படிக்கையினையும் நான் ஏற்படுத்திக் கொள்ளவில்லை" என்றார்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத் தவரையில் அதில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உங்களுக்கும் இடையிலேயே எழுத்து மூலமாக ஆவணம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருப்பதாக கூறிய நிலையில், அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் "அந்த ஆவணத்தை சில நாகரிகம் கருதி வெளியில் காட்ட முடியாத நிலைமை இருக்கிறது எனக் கூறியிருந்தாரே! இதற்கு உங்கள் பதில் என்னவாக இருக்கிறது?

"அவர் அப்படியாக கூறியிருந்தால் அந்த உடன்படிக்கையை காட்டுமாறு நான் அவருக்கு சவால் விடுகிறேன்.

எட்டு, ஒன்பது வருடங்கள் ஆகிவிட்டது - இனியாவது காட்டலாம். அவ்வாறான உடன்படிக்கை தொடர்பில் கலந்துரையாடவும் இல்லை, நான் உடன்படிக்கைகளை நம்புவதில்லை. இப்படியான உடன்படிக்கை ஒன்றும் தேவையில்லை. மனச்சாட்சிப்படி வேலை செய்தாலே போதுமானது.

அதேபோல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது ஆதரவு என்பது தனிப்பட்ட ரீதியில் எனக்கு மட்டுமல்ல அது நல்லாட்சியை உருவாக்குவதற்காக கொடுக்கப்பட்ட ஆதரவு" - என்றார்.

# யாழ்ப்பாணத்தில் ஓட்டோக்களுக்கு ஓகஸ்ட் 1 இற்கு முன் கட்டணமானி!



அடுத்த மாதம் முதலாம் திகதிக்குள் யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கு கட்டணமானி பொருத்தும் நடவடிக்கை முடிவுறுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போது சங்கத்தின் செயலாளர் இதனை தெரிவித்தார்.

தற்பொழுதுள்ள பொருளாதார நிலமையினால் ஓட்டோ உரிமையாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அரசாங்க அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய நாங்கள் முச்சக்கர வண்டிகளுக்கு கட்டணமானி பொருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏகமனதாக தீர்மானித்துள்ளோம் என செயலாளர் தெரிவித்தார்.

# சரவணபவன் பென்சி கவுஸ் இன்

# மாபெரும் ஆடித் தள்ளுபடி!

## கொழும்பு மொத்த விலையில்



## 30% விலைக் கழிவுடன்



### மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பிளாஸ்ரிக் பொருட்கள் | கிறீம் வகைகள் | பான்சி வகைகள் | பாட்டா வகைகள் |
சில்வர் | மாபிள் | அலுமினியப் பொருட்கள் | சோடனைப் பொருட்கள் |
விளையாட்டுப் பொருட்கள் | மணிக்கூட்டு வகைகள் | தையல் உபகரணங்கள் |
அன்பளிப்பு பொருட்கள் | மொடல் பட்டின்கள் | குடைகள் | அழகுசாதன பொருட்கள் |
மாஸ்க் வகைகள் | பாடசாலை உபகரணங்கள் | பாக் வகைகள் இன்னும் பல
பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.


**26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**உரிமையாளர் : தே.கலைதாசன் (கரன்) 021 3155 900**





காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன்
நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை



# மகாநதி ஜ்வல்லறி

தங்கப்பவுண் நகை வியாபாரம்

## MAKANATHY JEWELLERY

Manufacturers of Gold Jewels

22 கரட் தங்க நகைகள் ஒடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

72A. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**CALL NOW : 077 581 2025**



# சசிகா லேணர்ஸ்
# SASIKA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழியிலும் வாகனப் பயிற்சி
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்புகள்
- அனைத்து கிளைகளிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்
- தவணைக் கட்டணம் மற்றும் விரும்பிய நேரத்திலான பயிற்சி

**தலைமைக் காரியாலயம்**

இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
0777 226 247 / 077 614 0361 / 021 221 7678 / 021 221 7578
www.sasikalearners.com



**கிளை நிறுவனங்கள்**

**வேலணை**
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472 / 070 3013 021

**மல்லாகம்**
கே.கே.எஸ் வீதி
021 224 3393 / 070 3013 014

**சங்கானை**
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664 / 070 3013 016

**யாழ்ப்பாணம்**
இல. 281 C, மணிக்கூண்டு கோபுர வீதி
021 222 8004 / 070 3015 004




இப்பத்திரிகை 10.07.2023 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.